# தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை

(அகழ்வைப்பகக் கையேடு)

பதிப்பாசிரியர்

முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப.,

முதன்மை செயலாளர் (ம) ஆணையர்

ஆசிரியர்

**கோ. முத்துசாமி**

காப்பாட்சியர், தரங்கம்பாடி

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2009

12162.1

முதற் பதிப்பு 2009 - 500 பிரதிகள்

வெளியீடு எண் : 210

தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகக் கையேடு

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

பதிப்பாசிரியர்
முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப.,

ஆசிரியர்
கோ. முத்துசாமி

விலை: ரூ. 67.00

அச்சிட்டோர்
சென்னை அச்சக தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்.,
6, பைக்கிராப்ட்ஸ் சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

முன் அட்டை: டேனிஷ் கோட்டை

# பொருளடக்கம்


பதிப்புரை

நூலாசிரியர் உரை

1. தரங்கம்பாடி அமைவிடம் --- 1

2. தரங்கம்பாடியில் உள்ள சில வரலாற்று நினைவுச்சின்னங்கள் --- 6

3. டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் வருகை --- 13

4. தரங்கம்பாடியும் கிருத்தவமும் --- 21

5. டேனிஷ் கோட்டை கட்டட அமைப்பு --- 28

6. கி.பி. 1767-இல் தரங்கம்பாடி நகரத்தின் அமைப்பு --- 36

7. டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம் காட்சிப் பொருட்கள் --- 39

8. தரங்கம்பாடியில் தொல்லியல் துறை அகழாய்வு --- 57

9. தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள திருத்தலங்களின் வரலாறு --- 63

முனைவர் **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை,
சென்னை - 600 008.

# பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கீழ் இயங்கி வரும் பதினான்கு அகழ்வைப்பகங்களில் ஒன்று தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகமாகும். டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடியை மையமாகக் கொண்டு இப்பகுதியில் வணிகமும், ஆட்சியும் செய்துள்ளார்கள். அவர்கள் பயன்படுத்திய சுதைப் பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், இரும்புப் பொருட்கள், மரப் பொருட்கள், டேனிஷ் கால கல் ஆயுதங்கள், டேனிஷ் முத்திரையுடன் கூடிய ஓலை ஆவணங்கள், காகித ஆவணங்கள் போன்றவைகள் டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும் தரங்கம்பாடியைச் சுற்றி அமைந்துள்ள திருத்தலங்களின் வரலாறும் விரிவாக எழுதப்பட்டுள்ளது. டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம் குறித்து அனைவரும் அறியும் வண்ணம் "தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகக் கையேடு" என்ற தலைப்பிலான நூல் வெளியிடுவதில் நான் பெருமையடைகிறேன்.

இந்நூல் பகுதி - II திட்டம் (2009-10) ஆண்டு நூல் வெளியீட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து வெளியிடப் படுகின்றது. இந்நூலினை வெளியிட நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். துறையில் இதுவரை எட்டு அகழ்வைப்பகக் கையேடுகள் வெளிவந்துள்ளன.

தற்போது வெளிவரும் இந்நூலினை விரிவாக எழுதியுள்ள தரங்கம்பாடி காப்பாட்சியர் திரு. கோ. முத்துசாமி அவர்களைப் பாராட்டுகிறேன். இந்நூல் சிறப்பாக வெளிவரத் துணைபுரிந்த அகழாய்வாளர் முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கும் மற்றும் அச்சுப்பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**

# நூலாசிரியர் உரை

நாகை மாவட்டத்தில் தொன்மைக்கும், வரலாற்றுக்கும் பெருமை சேர்க்கும் சுற்றுலாத் தலமாக தரங்கம்பாடி விளங்கி வருகிறது. வெளிநாட்டவர்களால் "கிழக்குக் கடற்கரையின் ராணி" என்று அழைக்கப்படும் பெருமை உடையது தரங்கம்பாடி ஆகும். சங்ககாலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம் வரை இந்த ஊருக்குத் தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்பு இருந்து வருகிறது. முன்னாளில் தஞ்சை மாவட்டத்தில் கிழக்கில் உள்ள கடற்கரையை ஒட்டிய பகுதிகளைக் கீழத் தஞ்சை மாவட்டம் என்று அழைத்து வந்தனர். தஞ்சை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டபோது கீழத் தஞ்சை என்பது நாகப்பட்டினம் என ஆயிற்று. இதன் மேற்கே அமைந்த பகுதி திருவாரூர் மாவட்டம் என ஆயிற்று.

முன்பு மயிலாடுதுறை தாலுக்காவிற்குள் தரங்கம்பாடி சேர்ந்திருந்தது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தரங்கம்பாடி மயிலாடுதுறையிலிருந்து பிரிந்து தனி தாலுக்கா ஆனது. இதற்குரிய வட்டாட்சியர் அலுவலகம் பொறையாரில் இயங்கி வருகிறது. தற்போது உள்ள தரங்கம்பாடியும், பொறையாரும் சேர்ந்த பகுதியே தரங்கம்பாடி பேரூராட்சி என அழைக்கப்படுகிறது.

தரங்கம்பாடி என்றாலே நமது நினைவுக்கு வருவது கடற்கரையை ஒட்டியுள்ள டேனிஷ் கோட்டைதான். இது நானூறு ஆண்டு காலம் பழமை வாய்ந்தது. கோட்டையின் வடக்கே சிறிது தூரத்தில் அருள்மிகு மாசிலாமணிநாதர் கோயில் அமைந்துள்ளது. இது குலசேகரப் பாண்டியனால் 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது ஆகும். இக்கோயிலில் தற்போது மூலவர் கருவறை மட்டும் எஞ்சி நிற்கிறது. மற்றபடி அம்மன் சன்னதி, முருகன், விநாயகர் சன்னதிகள், கொடிக்கம்பம், பலிபீடம், திருச்சுற்று மதில்கள் முதலியன கடலின் சீற்றத்தால் இடிந்து கிடக்கின்றன. ஏறத்தாழ 100 மீட்டர் அளவுக்கு கடல் சீற்றம் நிலப்பகுதியை விழுங்கியுள்ளதும்

தெரியவருகிறது. தரங்கம்பாடியில் வரதராஜப் பெருமாள் கோயிலும், ரேணுகாதேவி அம்மன் கோயிலும், பிள்ளையார் கோயில்கள் மூன்றும் உள்ளன.

மேலும், தரங்கம்பாடியில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த தர்காவும், பள்ளிவாசலும் அமைந்துள்ளன. மூன்று கிருத்தவத் தேவாலயங்கள் உள்ளன. எனவே தரங்கம்பாடி என்பது மும்மதங்களின் சங்கமம் பெற்ற ஒரு பேரூராகவும் திகழ்ந்து வருகிறது.

தரங்கம்பாடியைச் சுற்றி நான்கு பக்கமும் பாதுகாப்பான கோட்டையின் மதில் சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஊரின் மேற்கே அமைந்த முகப்பு வாயில் டேனிஷ் அரசர் 7-ஆம் கிறிஸ்டியனால் 1792-இல் கட்டப்பட்டுள்ளது. இப்பகுதி மத்திய அரசின் பாதுகாப்புச் சின்னமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது.

தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்க மன்னரிடம் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்டியன் செய்து கொண்ட வணிக ஒப்பந்தத்தின்படி 1620-இல் டேனிஷ் கப்பல் படை தலைவர் ஓவ் கிட்டி என்பவர் கடற்கரை அருகில் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாக டேனிஷ் கோட்டையினையும், அதனைச் சுற்றி நான்கு பக்கமும் அகழியினையும், அதன் வெளியே உயர்ந்த மதில் சுவரினையும் கட்டி வைத்தனர். டேனிஷ்காரர்கள் 1845 வரை இப்பகுதியில் வணிகத்துடன் அரசாட்சியும் செய்துள்ளனர். அதன் பிறகு வந்த ஆங்கிலேயர் களுடன் இவர்களால் போட்டி போட முடியாததால் வணிக உரிமையைக் கட்டடங்களுடன் 13 லட்சத்திற்கு விற்று விட்டனர். அதன்பிறகு நாடு சுதந்திரம் அடையும் வரை தரங்கம்பாடி கோட்டையும், இதர வணிகப் பகுதிகளும் ஆங்கிலேயர் வசமாயின. சுதந்திரத்திற்குப் பின் கோட்டையில் நீதிமன்றங்களும், பொதுப்பணித்துறை அலுவலகங்களும் இயங்கி வந்துள்ளன. இதன்பிறகு 1977-இல் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாக அறிவிக்கப்பட்டு கோட்டையும், அதன் முதல் தளத்தில் டேனிஷ் அருங்காட்சியகமும் இயங்கி வருகிறது.

## டேனிஷ் அகழ்வைப்பகத்தின் பெருமைகள்

டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடி கோட்டையை மையமாக வைத்து சுமார் 225 ஆண்டுகள் இப்பகுதியில் ஆட்சியும் வணிகமும் செய்துள்ளார்கள். அவர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர்கள் சுமார் 100 ஆண்டுகள் தொடர்ந்து இப்பகுதியில் வணிகம் செய்துள்ளார்கள். இக்காலகட்டத்தில் அவர்கள் தரங்கம்பாடியில் அமைத்த கட்டடங்கள், அவற்றுள் உபயோகித்த கலைப்பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், மரச்சாமான்கள், இரும்புப் பொருட்கள், இரும்பாலான போர் ஆயுதங்கள், டேனிஷ்கால கல் ஆயுதங்கள், டேனிஷ் முத்திரையுடன் கூடிய ஓலை ஆவணங்கள், காகித ஆவணங்கள், சோழர்கால கற்சிற்பங்கள், சங்ககால முதுமக்கள் தாழி, சுடுமண் பொருட்கள், திமிங்கிலத்தின் எலும்பு, டேனிஷ்கால பீரங்கிகள், கோட்டைப் பகுதியில் கிடைத்த பல அரிய பொருட்கள் சேகரிக்கப்பட்டு அகழ்வைப்பகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் சுற்றுலா வந்து இவைகளை நேரில் கண்டுகளித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

கடந்த நான்கு ஆண்டுகளாக இத்தொல்லியல் துறையின் முதன்மைச் செயலர் மற்றும் ஆணையராக திருமிகு. முனைவர். தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப., அவர்கள் மிகவும் திறம்பட செயலாற்றி வருகிறார்கள். நிர்வாகத்திலும், கல்வெட்டு ஆராய்ச்சி செய்வதிலும், நூல்கள் தரமாக வெளியிடுவதிலும் இவர்களின் பணி உயர்ந்த நிலையில் பலராலும் பாராட்டும் அளவிற்கு உள்ளதை நாம் அறியலாம். இவரது ஆட்சிக்காலத்தில்தான் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்கள் நல்ல தரத்துடன் இத்துறையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இது அவரால் துறைக்கு கிடைத்த பெரிய சாதனையாகும். அய்யா அவர்கள் தரங்கம்பாடி அகழ்வைப்பகக் கையேட்டினை எழுதி அளிக்கும் பணியை எனக்கு அளித்தார்கள். இதற்கு மிக்க நன்றியுடையேன். மயிலாடுதுறையின் கல்வெட்டு

ஆய்வாளராகப் பணிபுரிந்த என்னை தரங்கம்பாடி டேனிஷ் அகழ்வைப்பகத்தின் காப்பாட்சியராக நியமனம் செய்து பெருமை வழங்கிய தொல்லியல் துறையின் முன்னாள் சிறப்பு ஆணையர் திருமிகு க. அசோக்வர்தன்ஷெட்டி இஆப., அவர்கட்கும் மிக்க நன்றியுடையேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆலோசனையும் உதவியும் வழங்கிய இத்துறை பதிவு அலுவலர் முனைவர். திருமதி. சீ. வசந்தி அவர்கட்கும், இந்நூலை உரிய வடிவில் D.T.P. செய்து, அட்டைப்படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர், திருமதி. ச. சரஸ்வதி அவர்கட்கும், அச்சுப்பிழை திருத்திய முதுநிலை முதலாள், திரு. மா. ஆ. சங்கர் அவர்கட்கும் மற்றும் அச்சுப்பிரிவில் உள்ள அனைவருக்கும், நிழற்படங்கள் எடுத்துத் தந்த பதிவுரு எழுத்தர் திரு. அ. தங்கராசு அவர்கட்கும், அவ்வப்போது எழுத்துப்பணியில் உதவி செய்த விற்பனைச் சிற்றெழுத்தர், திரு. இரா. கெஜேந்திரன் அவர்கட்கும் எனது பாராட்டுகளையும், மனமார்ந்த நன்றியையும் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரங்கம்பாடி
18-9-2009

அன்பன்
கோ. முத்துசாமி

# தரங்கம்பாடி அமைவிடம்

முன்பு கீழத் தஞ்சை என்று அழைக்கப்பட்ட பகுதி தற்போது நாகை மாவட்டம் எனப்படுகிறது. இம்மாவட்டத்தில் அமைந்துள்ள கடற்கரைப் பட்டினங்களுள் ஒன்றே தரங்கம்பாடி, "சோழமண்டலக் கடல் அரசி" என்று மேலை நாட்டவர்களால் புகழப்பட்ட இவ்வூர் 11° அட்ச ரேகையிலும், 80° தீர்க்க ரேகையிலும் அமைந்துள்ளது. மயிலாடுதுறைக்கு கிழக்கே 30 கிலோ மீட்டர் தொலைவிலும், சீர்காழிக்கு தெற்கே 40 கிலோ மீட்டர் தொலைவிலும் வங்கக் கடலை ஒட்டி அமைந்துள்ளது இவ்வூர். மயிலாடுதுறை தாலுக்காவை இரண்டாகப் பிரித்து தரங்கம்பாடி தனி வட்டமாக இயங்கி வருகின்றது.

## ஊர்ப்பெயர்

சங்க இலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலிய இலக்கியங்களில் இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சங்ககாலத்தில் தரங்கம்பாடிக்கும் "பொறையாறு" என்பதே பெயர். பொறையாற்றுப் பெரியன் கிழான் என்பவன் இப்பகுதிக்குத் தலைவன் என்பதைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று சுட்டுகிறது.[1] இவ்வூர் ஒரு கடற்கரைப் பட்டினம் என்பதை நற்றிணை 131-ஆம் பாடலும், அகநானூறு 100-ஆவது பாடலும் சுட்டுகின்றன. சங்ககாலத்திலேயே இவ்வூர் ஒரு துறைமுகப்பட்டினமாக விளங்கியது என்பதைப் புறப்பாடல் வழி அறிகிறோம். கடற்கோளாலும், புயலாலும் பாதிக்கப்பட்டு அஞ்சி ஓடிய மக்கள் மேல் நோக்கி நகர்ந்து தங்கள் குடியிருப்பை தற்போதுள்ள பொறையாற்றில் அமைத்துக் கொண்டனர். இதனால் கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கடற்கரை நகர் பொலிவை இழந்து தன் சிறப்பையும் இழந்து விட்டது. எனினும் 14,15-ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுக்கீசியர்கள் தங்களின் வணிகத் துறைமுகமாக இவ்வூரைப் பயன்படுத்தியுள்ளனர். கி.பி. 4-ஆம் நூற்றாண்டுக்கு முன் இவ்வூர் 'சடங்கம்பாடி' என வழங்கப்பட்டது என்பதை கி.பி. 1306-ஆம் ஆண்டைச் சேர்ந்த குலசேகர பாண்டியனின் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.[2] மாறவர்மன் குலசேகர பாண்டியனே

1. புறநானூறு - 391

2. S.I.I. Vol. V, No. 899

கடற்கரையில் அமைந்துள்ள மாசிலாநாதர் சிவன் கோயிலைப் புதுப்பித்துக் கட்டி இவ்வூருக்கு சடங்கம்பாடியான குலசேகரப்பட்டினம் எனப் பெயரிட்டான் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.[1]

சடங்கன் என்பது சிவபெருமானின் திருப்பெயராகும் இது. வடமொழியின் தமிழ் வடிவம். பாடி என்பது நகர் என்பதாகும். எனவே சடங்கன்பாடி என்பது சிவபெருமான் பெயரால் எழுந்த ஊர்ப் பெயராகும்.

சில வரலாற்றாசிரியர்கள், தரங்கம் என்பது கடல் அலையைக் குறித்தது என்றும், பாடி என்பது, பாடுதல் என பொருள் கொண்டு, "கடல் அலை பாடும் ஊர்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.[2] பிரெஞ்சு ஆட்சிப் பகுதியில் உள்ள மைல் கற்கள் இவ்வூரின் பெயரைத் 'தயங்கன்பாடி' எனச் சுட்டுகின்றன. டேனிஷ்காரர்கள் வருகைக்குப் பிறகு இவ்வூர் "டிரங்கோபார்' என மாறியது. தற்போது சாத்தங்குடி என்ற வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட ஊராக தரங்கம்பாடி அமைந்துள்ளது.

## தட்பவெப்ப நிலை

இவ்வூர் கடல் மட்டத்திற்கு மேல் 1.85 மீட்டர் உயரத்தில் அமைந்து உள்ளது. அக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்கள் நல்ல மழைக் காலமாகும். ஆண்டுக்குச் சராசரியாக 40 அங்குல மழை பெய்கிறது. மே, சூன் மாதங்களில் வெப்பம் மிகுதியாக இருக்கும். இவ்வூரின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற உடை நூலாடையே என்பதை அனைவரும் அறிவர்.

## ஓசோன் காற்று

ஏப்ரல், மே, சூன், சூலை ஆகிய மாதங்களில் மிக இதமான குளிர்ந்த கடற்காற்று (ஓசோன் காற்று) இப்பகுதியில் வீசுகிறது. பிராண வாயுவில் இரு மடங்கு ஆக்சிஜன் கூறுகள் உள்ளன. இத்துடன் மேலும் ஒரு கூறானது சேர்த்து $O_3$ ஆகி ஓசோன் ஆகிறது. இப்பிராண வாயுவின் அடர்த்தி அதிகமாகும். இக்காற்றில் ஒரு வித நறுமணமும், குளிர்ச்சியும் அதிகம் இருக்கும். பூமிக்கு மேல் 15 கிலோ மீட்டர் வரை முதல் 40 கிலோ மீட்டர் இக்காற்று பரவியிருக்கிறது. ஓசோன் காற்று தரங்கம்பாடியில்தான் அதிகம்

1. N. Sethuramzn, 'Imperial Panetgas' Madras-78
2. L. Easter Raj, Tranquebar; P.200, 'Irumalar' Madras. G. Veerappa Pillai; Tranquebar, Queen of Coramandal Coast, P.A.S.But, Madras-2, 1953.

வீசுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். இக்காற்று அண்டார்ட்டிகா கண்டத்தில் பரிணாமம் பெற்ற காற்றின் திசைக்கேற்ப நகர்ந்து உலகம் முழுதும் வீசுகிறது. சூரியனில் இருந்து வெளிப்படும் புற ஊதாக்கதிர்களை இக்காற்று வடிகட்டி மனிதனுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. புற ஊதாக்கதிர்கள் நேரிடையாக நம் உடலில் பட்டால் புற்று நோய் போன்ற கொடிய வியாதிகள் வரும் எனக் கண்டுபிடித்துள்ளார்கள். தரங்கம்பாடியில் அதிகமாக வீசும் ஓசோன் காற்றை சுவாசித்தால் தோல் புற்று, ஆஸ்துமா, சயரோகம் போன்ற நோய்கள் தீரும் என்றும், இதய நோயாளிகளுக்கும், வயோதிகர்கட்கும் இக்காற்று நன்மருந்தாக விளங்குகிறது என்றும் குறிப்பிடுகிறார்கள்.

## மக்கட்தொகை

கி.பி. 1985-ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி, தரங்கம்பாடி கோட்டை வளாகத்தில் 1766 பேர் வசித்துள்ளார்கள். இதில் 529 பேர் முஸ்லீம்கள் 150 பேர் ரோமன் கத்தோலிக்கர்கள். 137 பேர்கள் புராட்டஸ்டன்ட் இனத்தவர்கள். எஞ்சிய 950 பேர்கள் இந்துக்களாவர். தற்போது இதுமேலும் பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

## ஆறுகள்

டேனிஷ் ஆட்சி காலத்தில் கோட்டையை ஒட்டி அமைந்திருந்த உப்பனாறு உள்நாட்டு வணிகப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது. நண்டல் ஆறும், உப்பனாறும் சாகுபடிக்கு மட்டுமே பயன்பட்டன. குடிநீருக்கு உகந்ததாக இல்லை. கி.பி. 1755-ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் புயலின் காரணமாக டேனிஷ் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் பெரும் சேதத்திற்குள்ளாகியது. தரங்கம்பாடி மக்கள் ஒவ்வொரு ஆண்டும் புயல் மற்றும் வெள்ளத்தால் அஞ்சி வாழ்ந்து வந்தனர். இதைத் தவிர்க்கவே கி.பி. 1854-ஆம் ஆண்டு தரங்கம்பாடி திருமுல்லைவாசல் கால்வாய் வெட்டப்பட்டது. அது இன்றும் சில இடங்களில் அழிந்தாலும் தொடர்ந்து இருந்து வருவதைக் காணலாம்.

## நகர அமைப்பு

கி.பி. 1567-ஆம் ஆண்டைச் சேர்ந்த அச்சுதப்ப நாயக்கரின் கல்வெட்டு ஒன்றில்[1] கோட்டைக் காவலர்களைப் பற்றிய குறிப்பு

---

1. S.I.I. Vol. IV, No. 401

காணப்படுகிறது. கோட்டை சேனை கைக்கோளர்கள், சந்திரபாடியைச் சேர்ந்தவர்கள் என்ற குறிப்பு இக்கல்வெட்டில் காணப்படுகிறது. எனவே டேனிஷ்காரர்கள் வருகைக்கு முன்பே இவ்வூரில் போர்ச்சுக்கீசியர்கள் வணிக மையம் அமைத்திருந்தார்கள் எனத் தெரிகிறது.[1] தரங்கம் பாடியைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த மண்ணாலான சுற்று மதில் கி.பி. 1600க்கு முன்பே இருந்தது என்பதை டேனிஷ் ஆய்வு நூல்களும் சுட்டுகின்றன.[2] தரங்கம்பாடி கோட்டை மதிலுக்கு உட்புறம் அமைக்கப்பட்டிருந்த கட்டடங்களும், வீதிகளும், டேனிஷ் கட்டடக் கலைப்பாணி அமைப்பில் கட்டப்பட்டன.

1. வீட்டின் முன்புறம் தாழ்வாரம் அமைத்தல்
2. வட்டமான பெரிய தூண்கள் அமைத்தல்
3. பெரிய ஜன்னல் உட்புற திறப்புடன் அமைத்து, வெளிப்புறம் பாதுகாப்புக்காக கம்பிக் கதவுகள் அமைத்தல்
4. தனி மாளிகை அமைப்பு இன்றி ஒன்றை ஒன்று சார்ந்து வீட்டைத் தொடராக அமைத்தல்

முதலிய சிறப்பு அம்சங்கள் இவர்களுடைய கட்டடக் கலை அமைப்பில் சிறப்பிடம் பெற்றது. தொடர் அமைப்பில் வீடுகள் கட்டப்பட்டதால் காற்றோட்ட வசதி இன்மையால் சிரமப்பட்டனர். கி.பி. 1700-ஆம் ஆண்டுக்கு பிறகு கட்டப்பட்ட டேனிஷ் கட்டடங்கள் ஓட்டுக்கட்டட அமைப்புகள் மாற்றப்பட்டு மச்சுக் (டெர்ரஸ்) கட்டடங்களாகவும், வசந்த மண்டபம் மற்றும் தாழ்வாரம் வைத்தும் (வெராண்டா) அமைக்கப்பட்டன. இதனால், மழை மற்றும் சூரிய வெப்பத்தில் இருந்து தக்க பாதுகாப்பு கிடைத்தது. இதனால் நல்ல காற்று வசதியும் கிடைத்தது.

---

1. கி.பி. 1620-இல் தரங்கம்பாடியில் வணிகம் செய்துவரும் போர்ச்சுக்கீசியர்களை அப்புறப்படுத்த வேண்டும் என டி கோடே, மராட்டிய அரசரைக் கேட்டுக்கொள்கிறார். போர்ச்சுக்கீசியர்களும் தனக்கு வரி கொடுத்து வணிகம் செய்யும் நண்பர்கள் என்பதால் டி கோடேயின் வேண்டுகோளை மறுத்துவிட்டார் ரகுநாத நாயக்கர்
2. Tranquebar - 'Architedum' - Vol. IX, P. 216

டேனிஷ்காரர்கள் தரங்கம்பாடியில் கால் ஊன்றுவதற்கு முன்பே டேனிஷ் ஆட்சிப் பகுதியில் 5 இந்துக் கோயில்களும், ஒரு பள்ளி வாசலும், ஒரு சிறு ரோமன் கத்தோலிக்கத் தேவாலயமும் இருந்தன.[1] தரங்கம்பாடியில் வாழ்ந்த இந்துக்கள் மலபாரியன் என அழைக்கப்பட்டனர். போர்ச்சுக்கீசியர்கள் வெள்ளை ஐரோப்பியர் (அல்லது) பரங்கியர்கள் என அழைக்கப்பட்டனர். முஸ்லீம்கள் மஞ்சள் மூர் (Yellow Moors) என்றும் வழங்கப்பட்டனர், என்பதை டேனிஷ் ஆவணங்களால் அறிகிறோம்.[2] இந்துக்களில் கடல் வழி வாணிபம் செய்தவர்கள் 'கரையார்' என வழங்கப்பட்டனர் என்பதை மாசிலாமணிநாதர் கோயில் கல்வெட்டுகளால் அறிகிறோம். டேனிஷ் ஆட்சிக்காலத்தில் துபாசாக விளங்கிய காளிங்கராயப் பிள்ளையே இவ்வினத் தலைவர் ஆவார். ஆங்கிலம் மற்றும் தமிழ் இரண்டு மொழியும் பேசுவர். இவர்கள் வரி வசூல் செய்யும் அதிகாரியாக நியமிக்கப்பட்டனர். இவ்வினத்தவர்கள் கடலூரில் இருந்து நாகப்பட்டினம் வரை பரவலாக காணப்படுகிறார்கள்.

திருக்கடையூரில் உள்ள 14-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றில் குலசேகரப்பட்டினத்து வியாபாரியைப் பற்றிய குறிப்பு ஒன்றும் காணப்படுகிறது.

---

1. நாகையில் இருந்து குடிவந்த மீனவர்கள் ஒரு சிறிய தேவாலயத்தைக் கட்டிக் கொண்டனர். இது கி.பி. 1640 வாக்கில் இடிந்து விடவே கி.பி. 1645-ஆம் ஆண்டு தரங்கம்பாடி முகப்பு வாசலை ஒட்டி ஒரு கத்தோலிக்க தேவாலயத்தை (Goaness Church) கட்டினர். சாத்தங்குடியில் உள்ள புனித சேவியர் தேவாலயம் கி.பி.1726-ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.
2. Annual Report of Jesuit Mission Letters (1620-22 A.D.) Jon Olafson, a Danes Soldier's Letters written in 1622 A.D.

# தரங்கம்பாடியில் உள்ள சில வரலாற்று நினைவுச்சின்னங்கள்

## மாசிலாமணிநாதர் சிவன் கோயில்

தரங்கம்பாடிக் கோட்டைக்கு வடபால் கடற்கரையை ஒட்டி 50 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது மாசிலாமணிநாதர் சிவன் கோயிலாகும். இக்கோயில் கி.பி. 1305-ஆம் ஆண்டு மாறவர்மன் குலசேகர பாண்டியன் என்பவனால் கட்டப்பட்டது. இதைக் கைலாசநாதர் கோயில் என்றும் அழைக்கிறார்கள். பாதிக்கு மேற்பட்ட கோயிலின் பகுதிகள் கடலில் மூழ்கி அழிந்து விட்டது. கி.பி. 1775-ஆம் ஆண்டு வரை இக்கோயில் நல்ல நிலையில் இருந்துள்ளது. இக்கோயிலின் மாதிரி வடிவம் ஒன்று மரத்தால் கி.பி. 1775-ஆம் ஆண்டு செய்யப்பட்டு டென்மார்க்கில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி வடிவை நோக்கும்போது இக்கோயில் இரண்டு பிரகார மதில்களைக் கொண்டது என்பதும், அம்மன் மற்றும் மாசிலாமணிநாதர் கோயிலைச் சுற்றி பல பரிவார தேவதைகளுக்கான சன்னதிகள் இருந்தன என்பதும் தெரிகிறது. கடலை நோக்கி 4 நிலைகளைக் கொண்ட இராஜகோபுரம் ஒன்று இருந்தது. தனி அம்மன் சன்னதியும், கொடிக்கம்பம், நந்தி, பலிபீடம் முதலிய சிறப்புகளுடன், இறைவனின் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்பைக் கொண்டு இருந்தன. தற்போது கோயிலைச் சுற்றி அமைந்திருந்த பிரகார மதில், மண்டபங்கள், இராஜகோபுரம், கோயிலின் முன் பகுதிகள் யாவும் கடலில் மூழ்கிவிட்டன. இக்கோயிலில் குலசேகரபாண்டியன், வீரபாண்டியன், அச்சுதப்ப நாயக்கர் முதலியோர் கல்வெட்டுகள் இருந்தன. தற்போது இவை கடலுள் மூழ்கிவிட்டன. ஒரு கல்வெட்டு மட்டும் கடலுள் இருந்து சேகரித்து அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இயற்கையுடன் ஒன்றி அமைந்துள்ள இக்கோயில், வெளிநாட்டவர்களை மிகவும் கவர்ந்துள்ளது.

## பெருமாள் கோயில்

இக்கோயில் ஃபோர்கன் தெருவை அடுத்துள்ள பெருமாள் கோயில் தெருவில் அமைந்துள்ளது. இங்கே எழுந்தருளியுள்ள இறைவன் வரதராஜப் பெருமாள் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். டேனிஷ்காரர்கள் வருகைக்கு முன்பே இக்கோயில் இருந்துள்ளது. கி.பி. 1606-இல் வெட்டப்பட்ட ஒரு கல்வெட்டு இக்கோயிலைக் கட்டியவன், விக்கிரமாதித்த செட்டி என்று குறிக்கிறது.[1] இவர் இக்கோயிலைக் கட்டியதோடு நாள் வழிபாட்டுக்கும், திருவிழாவிற்கும் நிவந்தம் அளித்துள்ளார். மேலும் சீன நாட்டு கப்பலில் வணிகத் தொடர்பு கொள்வோருக்கு அளிக்கப்பட்ட தனி உரிமைகள் பற்றியும் இக்கல்வெட்டு கூறுகிறது. சீனக் கப்பலின் பெயர் 'சாம்பன் சுதந்திரம்' எனக் குறிக்கப்படுகிறது. இவ்வூர் ஆரிய நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட வரியைப் பற்றியும் இக்கல்வெட்டுக் குறிக்கிறது. இக்கோயிலில் உள்ள பெரிய வெண்கல மணி எழுத்துப் பொறிப்புடன் காணப்படுகிறது.

## சின்னக் கோயில்

தரங்கம்பாடி அஞ்சல் நிலையத் தெருவில் சின்ன கோயில் எனும் பெயரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. பொறையாறு கும்பினித் தோட்ட நாடார்களின் பொறுப்பில் உள்ள இக்கோயில் தஞ்சை நாயக்கர் கால கலைப் பாணியைக் கொண்டது. இக்கோயிலை டேனிஷ் ஆட்சிக் காலத்தில் துபாசாக இருந்த காளிங்கராயப் பிள்ளை என்பவர் கட்டினார் எனக் கூறப்படுகிறது.[2]

## பள்ளிவாசல்

தேனிசுக்காரர்களின் வருகைக்கு முன்பே இவ்வூரில் ஒரு பள்ளிவாசல் இருந்தது என்பதை ஜான் ஆல்ப்சன் குறிப்பிட்டுள்ளார்.[3] இவருடைய குறிப்புகள் கி.பி. 1622-ஆம் ஆண்டைச் சேர்ந்தவை. ஏறக்குறைய கி.பி. 1500-ஆம் ஆண்டு வாக்கில் இப்பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது.

---

1. Dr. R. Nagaswamy, 'Tranquebar' - P. 3.
2. இராமச்சந்திரன், சின்னக்கோயில் - 'தரங்கம்பாடி' கல்வெட்டு இதழ்.
3. 'Arno Lohmann' 'New Jerusalam Church' Diocesan Press, Madras-68, P. 14.

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த இஸ்மாயில் சாகிப் என்பவரை கப்பல் படைவீரர்கள் எதிரிகள் என நினைத்து சுட்டு விட்டார்களாம். உயிர் போகும் நிலையில் இருந்த இஸ்மாயில் சாகிப், 'தன் உடலைப் பெட்டியில் வைத்துக் கடலில் போட்டுவிடுங்கள்' என்றாராம். அவ்வாறு கடலில் வீசப்பட்ட பெட்டி தரங்கம்பாடியில் ஒதுங்கிய போது இவ்வூர் முஸ்லீம்கள் அதை முதலில் கோட்டைப் பகுதியில் அடக்கம் செய்தனர். பின்னர் அப்பெட்டியைப் பள்ளி வாசலுக்கு அருகில் வைத்து அடக்கம் செய்தனர் என இவ்வூரார் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு உருவானதே இப்பள்ளிவாசல் ஆகும்.

## புதிய எருசலேம் தேவாலயம்

சியோன் தேவாலயத்தில் டேனிஷ்காரர்கள் மட்டமே வழிபாடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். மதம் மாறிய உள்நாட்டவர்களுக்கு ஒரு தேவாலயம் தேவைப்பட்டது. கி.பி. 1707-ஆம் ஆண்டு சீகன்பால்கு தரங்கம்பாடி வந்தார். அடுத்த ஆண்டு கி.பி. 1708-இல் கடற்கரையை ஒட்டி கோட்டைக்கு முன்புறம் ஒரு சிறிய 'எருசலேம் தேவாலயம்' கட்டப்பட்டது. இது கடல் அலைபாயும் கரையில் இருந்ததால் புயலால் அழிந்துவிட்டது. எனவே புதிய எருசலேம் தேவாலயம் கட்ட கி.பி. 1714-ஆம் ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கி.பி. 1717-இல் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. டேனிஷ் நிர்வாகிகளும், இரு டேனிஷ் மத போதகர்களும், சில டேனிஷ் படை வீரர்களும் கலந்துகொண்டனர். சீகன்பால்கு, ஐரோப்பாவில் இருந்து சேகரித்து வந்த 19 ஆயிரம் வெள்ளி மற்றும் தங்கக் காசுகளை முதலாகக் கொண்டு இதன் வட்டியில் இருந்து, மரம் கண்ணாடி முதலியவற்றை வாங்கினார். டேனிஷ் லெப்டினென்ட் கிலாஸ் கிரேக்கில் என்பவரைக் கட்டடக் கலைஞராகக் கொண்டு சிலுவை வடிவில் தேவாலயம் வடிவமைக்கப்பட்டது. நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் 24 ஆயிரம் ரூபாய் நன்கொடையாகப் பெற்று இவ்வாலயத் திருப்பணி முடிக்கப்பட்டது. 11.10.1718-ஆம் ஆண்டு செவ்வாய்க்கிழமை திறப்பு விழா செய்யப்பட்டது. சீகன்பால்கு ஜெர்மன் மொழியில் பைபிள் வரிகளைப் படிக்க, டேனிஷ் கமாண்டர் முக்கால மணியும் ஒலிக்க அனுமதி அளித்தார். இந்த தேவாலயத்தை

இந்தியாவின் "முதல் லுத்ரன் தேவாலயம்" என்பர்.[1] தேவாலயத்தின் முகப்பில் 1718 என்ற ஆண்டும், நான்காம் பிரடரிக்கின் முத்திரையும் கிரீடமும் காட்சி தருகின்றன.

இத்தேவாலய வளாகத்தில் ஜெ.பி. ரோடலர் (1776-1803), சீகன்பால்கு (1718), பங்கு தந்தை கிராண்ட்யர் (1720) முதலியோர் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். பல நாடுகளில் இருந்தும் வரும் பயணிகள் இத்தேவாலயத்தைக் கண்டு செல்கிறார்கள்.

## சியோன் தேவாலயம்

புதிய எருசலேம் தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பே இத்தேவாலயம் கட்டப்பட்டது. 1620 முதல் 1701 வரை டேனிஷ்காரர்கள் கோட்டைக்கு உட்புறம் அமைந்திருந்த தேவாலயத்தில் தொழுகை நடத்தி வந்தனர். கி.பி. 1701-ஆம் ஆண்டு இராணி வீதியும், அரசர் வீதியும் சந்திக்கும் இடத்தில் டேனிஷ்காரர்கள் ஒரு தேவாலயம் கட்டினர். இதை சியோன் தேவாலயம் என்கிறோம். இத்தேவாலயம் டேனிஷ் கட்டடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதன் தொடக்க கால அமைப்பைப் பற்றி அறிய போதிய வரலாற்றுச் சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் கி.பி. 1782-ஆம் ஆண்டு இத்தேவாலயம் திருத்திக் கட்டப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் 120 அடி நீளமுள்ள ஒரு ஓட்டுக் கட்டடமாக இருந்தது. கி.பி. 1800 வாக்கில் டேனிஷ்காரர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்தது. எனவே தேவாலயத்திற்கு வருவோர் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. கி.பி. 1839-ஆம் ஆண்டு மிக நீளமாக இருந்த இவ்வாலயத்தை 77 அடியாகக் குறைத்து நாயக்கர் கால கட்டடப்பாணியில் வெளவால் மண்டப அமைப்பில் மேற்கூரையும் திருத்தி அமைக்கப்பட்டது. இதன்பிறகு எவ்வித மாற்றமுமின்றி பராமரிக்கப்படுகிறது. டேனிஷ்காரர்கள் தரங்கம்பாடியை விட்டுச் செல்லும்போது, இத்தேவாலயத்தை ஆங்கில திருச்சபையிடம் ஒப்படைத்தனர். பின் தென்னிந்திய திருச்சபை நிர்வாகத்தின் கீழ் வந்தது. இவர்கள் காலத்தில் சிறிதளவு மராமத்துப் பணி

1. History of New Jerusalem Church, by D. Indra Glory M.A., Desertation P. 16, 18.

நிகழ்ந்துள்ளது. மேலை நாட்டவர்களை மிகவும் கவர்ந்துள்ள நினைவுச்சின்னங்களில் இதுவும் ஒன்றாகும். இத்தேவாலய வளாகத்திலேயே டேனிஷ் கல்லறை ஒன்று உள்ளது. கி.பி. 1728 முதல் கி.பி. 1895 வரை உள்ள காலங்களில் மரணமுற்றவர்களை இப்பகுதியில் அடக்கம் செய்துள்ளனர்.

## கவர்னர் மாளிகை (உப்பு அலுவலகம்)

கி.பி. 1784-ஆம் ஆண்டு டேனிஷ் அரசு, கோட்டைக்கு முன்புறம் ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கியது. இந்த வீடே கவர்னரின் குடியிருப்பாக மாற்றப்பட்டது. கி.பி. 1845 வரை இந்த கட்டடம் கவர்னர்களின் மாளிகையாகவும், சமுதாயக் கூடமாகவும் செயல்பட்டது. டேவிட் பிரவுன் என்ற ஆளுநர் இந்த இடத்தை கி.பி. 1770-இல் விலைக்கு வாங்கி சில திருத்தங்கள் செய்து குடியிருந்தார். பின்னர் 1784-ஆம் ஆண்டு இந்த வீட்டை டேனிஷ் அரசுக்கு விற்றுவிட்டார். கி.பி. 1793-ஆம் ஆண்டு கீழ்த் தளம் மட்டும் சீர்திருத்தம் செய்து கட்டப்பட்டது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி டேனிஷ் சொத்துக்களை விலைக்கு வாங்கியபோது இந்த கட்டடமும் பிரிட்டிஷாரின் கைக்கு மாறியது. மாடிப்பகுதியில் உள்ள ஓட்டுக்கட்டடங்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியாரின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டன. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு மைய அரசின் உப்பு அலுவலகமாக இயங்கி வந்த இந்த மாளிகை தற்போது தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையின் பாதுகாப்பில் உள்ளது. மிகவும் பழுதடைந்த இக்கட்டடத்தை அதே நிலையில் புதுப்பிக்கும் பணி நடக்கிறது.

## கவர்னர் மாளிகை II (பெண்கள் ஆசிரியை பயிற்சிப்பள்ளி)

சோன்னஸ்-வான்-ரிக்லிங் என்பவர் கி.பி. 1838 முதல் 1841 வரை தரங்கம்பாடியில் டேனிஷ் ஆளுநராகப் பணியாற்றினார். இவருடைய குடியிருப்பு மாளிகையே இந்தக் கட்டடம். இரண்டு அடுக்குகளைக் கொண்ட இந்த மாளிகை பிற்கால டேனிஷ் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ரிக்லிங் கி.பி. 1823 முதல் கி.பி. 1841 வரை இந்த வீட்டில்தான் குடியிருந்தார். கி.பி. 1700-க்கு முன் ஒற்றைத் தளவரிசைக் கட்டடமாக இருந்தது. கி.பி. 1700-ஆம் ஆண்டு மேல்மாடிப் பகுதி கட்டப்பட்டுள்ளது. தற்போது

இந்த மாளிகையில் தெரெசா பெண்கள் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி நடைபெற்று வருகிறது. சமீபகாலத்தில் மாடிக் கட்டடத்தின் கூரைப்பகுதியை ஓட்டுக் கட்டடமாகத் திருத்திக் கட்டியுள்ளனர்.[1]

## சீகன்பால்குவின் ஆன்மீக வளர்ச்சி மன்றம்

புதிய எருசலேம் தேவாலயத்திற்கு முன்புறம் அமைந்துள்ள ஆன்மீக வளர்ச்சி மையக் கட்டடமும் புகழ்பெற்ற ஒரு வரலாற்றுச் சின்னமாகும். இக்கட்டடம் கி.பி. 1706 முதல் 1825 வரை டேனிஷ் திருச்சபைக்குச் சொந்தமாக இருந்து வந்தது. அப்போது இத்திருச்சபையில் மதபோதகர்களும், திருச்சபை அலுவலர்களும் தங்கியிருந்தனர். தங்கும் அறைகள், சமையல் கூடம், வரவேற்பறை என்று பலப் பகுதிகளைக் கொண்டிருந்தன. திருச்சபையின் வகுப்புகளும் இதன் உள்ளேதான் நடைபெற்றன. கி.பி. 1713 மற்றும் கி.பி. 1716 ஆகிய ஆண்டுகளில் இதை ஒட்டி மேற்குப்புறம் உள்ள இதர கட்டடங்களையும் வாங்கித் திருச்சபைக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். லுத்ரன் திருச்சபையின் கைக்கு இக்கட்டடம் மாறியபோது, சீகன்பால்கு ஆன்மீக வளர்ச்சி மன்றமாக மாற்றினர்.

## தரங்கம்பாடி ஊர் நுழைவாயில்

தரங்கம்பாடிக்கு வரும் பயணிகள் இந்த நுழைவாயிலைக் கடந்துதான் ஊரின் உள்ளே வரவேண்டும். இது ஏழாம் கிறிஸ்டியனின் ஆட்சிக்காலத்தில் கி.பி. 1792-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இரண்டு கருங்காலி மரக் கதவுகளும் இடையே பாதை சிறியதாகவும் கொண்டு விளங்குகிறது. செங்கல் மற்றும் சுதையைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இவ்வாயிலின் முகப்பில் மன்னனின் கிரீடமும் கீழ்ப்பகுதியில் 1792 என்ற ஆங்கில ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு இடையே யானை ஒன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் $C_7$ என்ற ஏழாம் கிறிஸ்டியனின் முத்திரையும் இடம் பெற்றுள்ளது. இந்த முகப்பு வாயில் மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக விளங்குகிறது. இந்நுழைவாயிலை ஒட்டி அமைந்துள்ள சுற்று மதில் கி.பி. 1660, கி.பி. 1704 ஆகிய ஆண்டுகளில் பராமரிப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது.[2]

---

1. Tranquebar, Architecture Vol. IX, P. 222

2. N. Ravichandra, 'Tranquebar a Study - P. 21 (P.G. Dissertation 1986)

மன்னரைக் காண்பதற்கு முன் அமைச்சர் கோவிந்த தீட்சதரைக் காணவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. இதை ஓவ் கிட்டி விரும்ப வில்லை. இரண்டு நாட்கள் தங்கியிருந்த ஓவ் கிட்டிக்கு மன்னரிடம் இருந்து மாற்று ஆணை ஒன்று வந்தது. இதன்படி இளைய அரசரையும், அமைச்சரையும் சந்திக்கும்படி குறிப்பிடப்பட்டிருந்தது. இறுதியில் நவம்பர் 7-ஆம் நாள் மன்னனைக் கண்டு பேசி வணிக ஒப்பந்தம் பெற்றார். இவ்வொப்பந்தத்திற்கு 'ஓவ் கிட்டி ஒப்பந்தம்' என்று பெயர்.

தரங்கம்பாடியில் தங்கி வாணிகம் செய்யும் போர்ச்சுக்கீசியர் களை டேனிஷ் எல்லையை விட்டு வெளியேறும்படி ஒப்பந்தம் எழுதவேண்டும் என ஓவ் கிட்டி வேண்டினார். இதை ரகுநாத நாயக்கர் ஏற்கவில்லை. டேனிஷ்காரர்கள் எந்த அளவுக்கு தம்முடன் வாணிகத் தொடர்பு கொண்டுள்ளார்களோ அதேபோன்று போர்ச்சுக்கீசியர்களும் தம்முடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளனர் என மன்னர் கூறிவிட்டார். நாகப்பட்டினம் மற்றும் காரைக்கால் போர்ச்சுக்கீசியர்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டபோது தரங்கம்பாடி டேனிசாருக்கு வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் 19.11.1620-ஆம் நாள் கையெழுத்தாகியது. போர்ச்சுக்கீசிய மொழியில் எழுதப்பட்ட இவ்வொப்பந்தத்தில் தெலுங்கில் 'ரகுநாத்' எனக் கையெழுத்திட்டார் நாயக்க மன்னர்.

இவ்வொப்பந்தப்படி 5 மைல் நீளமும், 3 மைல் அகலமும் கொண்ட தரங்கம்பாடி மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் டேனிசாரின் ஆட்சிக்குட்பட்டும், இதற்காக இவர்கள் வருட வாடகையாக 3111 ரூபாய் செலுத்தவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

## பொன்னோலை ஒப்பந்தம்

ரகுநாத நாயக்கர் கி.பி. 1620-இல் டென்மார்க் நாட்டுடன் வாணிக உறவு ஏற்படுத்திக் கொண்டு டென்மார்க் அரசரான நான்காம் கிறிஸ்டியனுக்கு ஒரு கடிதத்தை எழுதி அனுப்பினார். இக்கடிதம் ஓலைச்சுவடியின் வடிவில் வெட்டப்பட்ட பொன்தகட்டில் எழுதப்பட்டது. தமிழில் எழுதி இறுதியில் 'ஸ்ரீரகுனாத்' எனத் தெலுங்கில் கையெழுத்திட்டுள்ளார். இப்பொன்னோலை டென்மார்க் நகரில் உள்ள

ராயல் ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன் நகல் உரிய விளக்கங்களுடன் நமது அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. பொன்னோலை குறிப்பிடும் செய்திகள் பின்வருமாறு:-

1. ரௌத்திரி ஆண்டு சித்திரை மாதம் 22-ஆம் நாள் இப்பொன்னோலை எழுதப்பட்டது.
2. டென்மார்க் அரசர் டேமாற்க் றாசாவினவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளார்.
3. ரூலங் கலப்பைக் கற்பித்தார் (கேப்டன் லூலண்ட் கிரேப்) என்ற டென்மார்க் அதிகாரிக்குப் பரங்கியர்கள் (போர்ச்சுக் கீசியர்கள்) கடலில் தொல்லையளித்த செய்தியும், ரகுநாத நாயக்கர் அப்பரங்கியருக்கு 12 ஆயிரம் பொன்னை அபராதமாக விதித்ததோடு, ரூலங் கலப்பைக் கற்பித்தாருக்கு பல்லக்கு முதலிய மரியாதைகள் செய்து நட்பு கொண்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது.
4. தரங்கம்பாடி என்ற கரைத்துறை (துறைமுகம்) உருவாக்கக் கட்டளையிடப்பட்ட செய்தியும், டென்மார்க் நாட்டினர் இப்பகுதியில் குடியேற உரிமை அளித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது.
5. மிளகு, டென்மார்க் நாட்டிற்கு அனுப்பப்பட்ட செய்தியும், பீதாம்பரம், புருசா் துப்பட்டி முதலிய துணி வகைகளும் சமதாடு முதலிய ஆயுதங்கள் டென்மார்க் அரசருக்கு அனுப்பப்பட்ட செய்தியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.[1]

டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி வணிக உரிமை பெற்றவுடன் கப்பற்படைத் தளபதி ஓவ் கிட்டி (Ove Guiddey) தரங்கம்பாடியில் ஒரு கோட்டையைக் கட்டினார். இக்கோட்டை கி.பி. 1620-இல் கட்டப்பட்டதென்பதைக் கோட்டையில் உள்ள பின்வரும் சலவைக்கல் கல்வெட்டு குறிக்கிறது.

---

1. டாக்டர் நாகசாமி டென்மார்க் சென்றபோது புகைப்படமும், படி எடுத்தும் வந்தது இவ்வோலை.

"THE DANSBORG BUILT BY
OVE GEDDE COMMANDER IN THE ROYAL
DANISH NAVY CIRCA: 1620"

இக்கோட்டை கட்டும் பணி கி.பி 1654-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது.

டேனிஷ் ஆட்சிக்காலத்தில் பல டேனிஷ் கப்பல்கள் தரங்கம்பாடி வந்துள்ளது. கப்பல்களின் பெயரும் அவை வந்த ஆண்டும் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1) | டேவிட் | கி.பி. 1620 |
| 2) | எலிபெண்டா | கி.பி. 1620 |
| 3) | கிறிஸ்டியான் | கி.பி. 1620 |
| 4) | கோபன்கேகன் | கி.பி. 1620 |
| 5) | பிரின்ஸ் கிறிஸ்டியான் | கி.பி. 1671 |
| 6) | ஓல்டன் பர்க் | கி.பி. 1671 |
| 7) | கிரவுன் பிரின்ஸ் ஆப் டென்மார்க் | கி.பி. 1708 |
| 8) | மிஸ் ஜான்பிரட் சுசானன்னா | கி.பி. 1718 |
| 9) | குயின் அன்னா சோபியா | கி.பி. 1721 -23 |
| 10) | பிரின்ஸ் லூயிஸ் | கி.பி. 1761 |
| 11) | கவுன்டஸ் மால்கி | கி.பி. 1768 |
| 12) | கிறிஸ்டியானஸ் செப்டிமஸ் | கி.பி. 1801 |

கி.பி. 1624-ஆம் ஆண்டு வரை டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி கடனில் நடந்து கொண்டிருந்ததால் கம்பெனியின் வர்த்தக உரிமையை அரசனிடம் ஒப்படைத்தனர். கி.பி. 1755-ஆம் ஆண்டு வரை கடல் வழி வாணிபம் மசூலிப்பட்டினம், கல்கத்தா வரை விரிவுபடுத்தப்பட்டது. இலங்கை, மலேசியா, சீனா, சப்பான் போன்ற கீழ்த்திசை நாடுகளுடனும் வணிகம் செய்தனர். இந்தியாவில் கொள்முதல் செய்த சரக்குகளைக் கீழ்திசை நாடுகளில் விற்பனை செய்து அவற்றுக்கு ஈடாக அங்கிருந்து மதுவகை மற்றும் ஆடம்பரப் பண்டங்களை வாங்கி வந்தனர்.[1]

1. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறும் பண்பாடும் - தமிழ்நாடு பாடநூல் நிறுவன வெளியீடு - பக் :

கி.பி. 1755-இல் இவர்கள் வாணிபம் விரிவடைந்து கொண்டிருந்தபோது இந்தியா முழுவதும் வணிகம் செய்ய உரிமை வேண்டினர். ஆனால் இதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

கி.பி. 1756-ஆம் ஆண்டு மராட்டிய மன்னருக்கும், டேனிஷ் ஆளுநர் சியார்ஜ் குரோக்கிற்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த டேனிசார், இரண்டு இந்துக்கள் கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கினர். கோபமுற்ற மராட்டிய அரசர் ஒரு பெரும் தொகையைத் தண்டனையாக விதித்தார்.

இவர்களிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாட்டைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை ஆங்கிலேயர்கள் ஏற்றுக்கொண்டு சமாதானம் செய்து வைத்தனர். இதன் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தப்படி ஆங்கிலேயர்களும் தரங்கம்பாடித் துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

கி.பி. 1780-ஆம் ஆண்டு டேனிஷ்காரர்கள் தம் எதிரிகளுடன் தொடர்பு கொண்டு போர் ஆயுதங்களைப் பரிவர்த்தனைச் செய்து கொண்டார்கள் எனக் காரணம் காட்டி ஐதர் அலி டேனிசாருக்கு 14 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தார்.

ஆங்கிலேயர்கள், கி.பி. 1801-இல் டேனிஷ் எல்லையில் நிலவழி ஆக்கிரமிப்பும், கி.பி. 1815-இல் கடல்வழி ஆக்கிரமிப்பும் மேற்கொண்டதால் டேனிசாரின் வணிகம் நட்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

டேனிஷ் ஆளுநர்கள் உறுதியான முடிவுகளை உடனுக்குடன் எடுக்க முடியாமல் டென்மார்க் அரசரின் ஆணையை எதிர்நோக்கி யிருந்ததால் வாணிபம் பெரும் வீழ்ச்சிக்குள்ளானது. எனவே கி.பி. 1845-ஆம் ஆண்டு டேனிஷ் சொத்துக்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு விற்கப்பட்டன.

கி.பி. 1845-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் கல்கத்தா நகரில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தில் சில சிறப்பம்சங்கள் உள்ளன. டேனிஷ் குடியேற்றப் பகுதிகளான தரங்கம்பாடி, வங்காளத்தில் உள்ள சிராம்பூர் ஆகிய பகுதிகளும்,

அவற்றில் இருந்த டேனிஷ் அரசு அலுவலகங்களும், கட்டடங்களும் 12 லட்ச ரூபாய்க்கு விற்கப்படும். தரங்கம்பாடி டேனிஷ் குடியேற்றப் பகுதியானாலும் தஞ்சை சீமைக்குள் அடங்கிய பகுதியாதலால் மராட்டிய அரசருக்கு உரிய ஆண்டு வாடகை ரூ.4000-த்தை இனி பிரிட்டிசார் கொடுத்து வரவேண்டும். பொறையாற்றில் இருந்த ஆளுநரின் ஓய்வு மாளிகை, தில்லையாடி துரையின் தோட்டம் ஆகியன இதன் மூலம் பிரிட்டிசாருக்கு விற்கப்படுகிறது. சியோன் தேவாலயம், புதிய எருசலேம் தேவாலயம் முதலிய தேவாலயங்கள் அனைத்தும் டேனிஷ் திருச்சபைக்கே உரியன. நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் அனைத்தும் டேனிஷ் சட்டப்படி நடத்தி முடிக்கப்படும். வேலையில் இருந்து ஓய்வு பெற்று தாயகம் திரும்பியோருக்கு இனி டேனிஷ் அரசாங்கமே தொடர்ந்து சாகும் வரை அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் என்ற செய்திகள் இவ்வொப்பந்தத்தில் இடம் பெற்றிருந்தன.

தரங்கம்பாடி பிரிட்டிசாரின் கைக்கு மாறியவுடன் தஞ்சை மாவட்டத்தின் தலைநகராகத் தரங்கம்பாடி இருந்தது. மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகம் கி.பி. 1845 முதல் கி.பி. 1860 வரை தரங்கம்பாடியிலேயே இருந்தது. கோட்டைக்கு முன்புறம் உள்ள 'நாடார் மாளிகை' மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகமாக செயல்பட்டது. கி.பி. 1845 முதல் கி.பி. 1884 வரை கோடைக்கால நீதிமன்றம் தரங்கம்பாடியில் இயங்கி வந்தது.

## துறைமுகம்

கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டுகளில் சோழ மண்டலக் கடற்கரையில் 11 துறைமுகங்கள் சிறப்பாக இயங்கி வந்தன. இவற்றுள் எட்டாவது இடத்தை தரங்கம்பாடித் துறைமுகம் பெற்றிருந்தது.[1]

தரங்கம்பாடி பெரிய கப்பல்கள் வந்து தங்க வசதியான, ஆழமான கடற்பகுதியைக் கொண்டிருந்தது. இதனால் மேலை நாட்டுடன் சிறப்பாக வணிகத் தொடர்பு கொள்ள முடிந்தது.

நாகப்பட்டினத்தில் ஒரு புதுத் துறைமுகம் ஏற்படுத்தப்பட்ட போது தரங்கம்பாடித் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து

---

1. H.W. Gensichan, 'Tranquebar, Then and Now' P. 8.

விட்டது. மேலும், நாகையில் இரயில்வே போக்குவரத்து ஏற்பட்டதால் கி.பி. 1861-ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டுக் கடல் வாணிபப் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. கி.பி. 1936 முதல் கி.பி. 1951 வரை சிறிய துறைமுக வரிசையில் தரங்கம்பாடி செயல்பட்டு வந்துள்ளது[1] என்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

## மேலும் சில சிறப்புச் செய்திகள்

கி.பி. 1690-இல் டேனிஷ் நிர்வாகக் கட்டடங்கள் கட்டப்பட்டன. இதை நியாய தீர்ப்புச் சபை என அழைத்தனர். இக்கட்டடங்கள் சீயோன் தேவாலயத்திற்கு நேர் முன்புறம் அமைந்திருந்தன.

கோட்டைக்கு முன்புறம் உள்ள அணிவகுப்பு மைதானத்திலும், இராணித் தெருவிலும் டேனிசார் பல வீடுகளை விலைக்கு வாங்கிக் குடியேறினர். இக்குடியேற்றம் கி.பி. 1690 வாக்கில் நடந்துள்ளது.[2]

கி.பி. 1730-ஆம் ஆண்டில் கணக்கெடுப்பின்படி தரங்கம்பாடியில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| 1) டேனிஷ்காரர்கள் | 66 பேர்கள் |
| 2) போர்ச்சுக்கீசியர்கள் | 38 பேர்கள் |
| 3) இந்தியர்கள் | 674 பேர்கள் ஆவர். |

கி.பி. 1790-ஆம் ஆண்டு பீட்டர் ஹெர்மன் ஆளுநராக இருந்தபோது ஒரு கணக்கெடுப்பு நடந்துள்ளது. இதன்படி தரங்கம்பாடியில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | |
|---|---|
| 1) டேனிஷ்காரர்கள் | 157 பேர்கள் |
| 2) ஆங்கிலேயர் மற்றும் பிரெஞ்சுகாரர்கள் | 20 பேர்கள் |
| 3) போர்ச்சுக்கீசியர்கள் | 62 பேர்கள் |
| 4) இந்தியர்கள் | 3482 பேர்கள் |
| ஆக மொத்தம் | 3721 பேர்கள் |

1. G. Vasantha, 'Tranquebar in Church History and Historical Study', P. 13

2. Tranquebar, Architecture, Vol. IX - P. 216.

இக்காலகட்டத்தில் திருக்கடையூர், தில்லையாடி, திருவிடைக்கழி, திருக்களாச்சேரி உள்ளடங்கிய 15 மைல் சுற்றளவுள்ள சுமார் 15 ஊர்கள் டேனிசாரின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இதில் 20,000 பேர்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என டேனிஷ் நூல்கள் கூறுகின்றன.

கி.பி. 1702-ஆம் ஆண்டு நடந்த புள்ளிவிவரக் கணக்கெடுப்பின்படி தரங்கம்பாடியில் இருந்த குடியிருப்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு:[2]

| | |
|---|---|
| மாடி வீடுகள் | 381 வீடுகள் |
| மண் வீடுகள் ஓட்டுக் கட்டடத்துடன் | 314 வீடுகள் |
| குடிசை வீடுகள் | 385 வீடுகள் |

இங்கு வாழ்ந்த இந்திய மக்கள் 4,047 பேர்கள்.

ஜான் ஆல்ப்சன் என்ற டேனிஷ் வீரன் தரங்கம்பாடியில் கி.பி. 1622 முதல் பீரங்கி வீரனாகப் பணியாற்றியவர். கி.பி. 1626-ஆம் ஆண்டு அவர் எழுதி வைத்த நினைவுக்குறிப்புக்ள் இந்திய மக்களின் பழக்க வழக்கங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது.[3]

"வணிகர்கள் சரியான அளவையில் பொருட்களை அளந்து தருகிறார்கள். பொய் பேசுபவர்களைக் கண்டால் இந்நாட்டவர்களுக்கு பிடிக்கவில்லை. அதிகமாக உண்பவனையும், குடிப்பவனையும் கண்டால் திட்டுவார்கள். இந்தியர்கள் பெரும்பாலும் மது வகையைத் தொடுவதில்லை. குடிப்பவனின் தலைமயிரைப் பிடித்துக் குலுக்கி, மார்பில் உதைத்து சனியனே! எனத் திட்டுகிறார்கள்.

இந்தியக் கொத்தனார்கள் ஐரோப்பியக் கொத்தனார்களை விட சுறுசுறுப்பானவர்கள் மிக்க திறமையானவர்களாகவும் விளங்குகிறார்கள் . . . ." என்று குறிப்பிட்டுள்ளார். இனி அடுத்த பகுதியில் டேனிஷ்காரர்கள் தரங்கம்பாடி வந்தபிறகு கிருத்தவ மதம் பெற்ற வளர்ச்சியைப் பற்றிச் சுருங்கக் காண்போம்.

---

1. Tranquebar, Architecture, Vol. IX - P. 33
2. Tranquebar: 1702, Danska Kancelli, 'Vol.D.5 National Archives' இத்தொகுதியில் 1790, 1802, 1835 ஆகிய ஆண்டில் தரங்கம்பாடியில் இருந்த மக்கள் தொகைப் புள்ளி விவரமும் உள்ளன.
3. Dr. Nagaswamy, 'Tranquebar' P. 27

[library stamp]

# தரங்கம்பாடியும் கிருத்தவமும்

## கத்தோலிக்கத் திருச்சபை

கி.பி. 1620-ஆம் ஆண்டு டேனிசுக்காரர்கள் தரங்கம்பாடி வருவதற்கு முன்பே கத்தோலிக்கம் இங்கே வளர்ச்சி பெற்றிருந்தது. கி.பி. 1622-ஆம் ஆண்டு ஜான் ஆல்ப்சன் எழுதிய கடிதத்தில், டேனிசுக்காரர்கள் தரங்கம்பாடி வருவதற்கு முன்பே கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்று இருந்ததைச் சுட்டுகிறார்.[1]

இத்தேவாலயத்தை நாகப்பட்டினத்தில் இருந்து தரங்கம்பாடி வந்து குடியேறிய மீனவர்களே கட்டியுள்ளனர். இத்தேவாலயம் கி.பி. 1640-ஆம் ஆண்டுவாக்கில் சிதைந்துவிடவே கத்தோலிக்க இனத்தவர்கள் தங்களுக்கென ஒரு தேவாலயத்தைத் தரங்கம்பாடியில் கட்டிக்கொள்ள விரும்பினர். கி.பி. 1658-ஆம் ஆண்டுவாக்கில் நாகப்பட்டினத்தில் இருந்து துரத்தப்பட்ட போர்ச்சுக்கீசியர்கள் டேனிஷ் ஆளுநரின் ஆதரவில் தரங்கம்பாடிப் பகுதியில் குடியேறினர். இவர்கள் டேனிஷ் ஆளுநர் வில்கம் வியால் அவர்களிடம் அனுமதி பெற்று தரங்கம்பாடி நுழைவாயிலுக்கு வடபால் ஒரு தேவாலயத்தைக் கட்டினார்கள். இதை கோவாணஸ் தேவாலயம் (Goaness Church) என அழைப்பர். கி.பி. 1645-ஆம் ஆண்டு இது கட்டி முடிக்கப்பட்டது. 1700 வாக்கில் இத்தேவாலயம் சிதைந்துவிடவே கி.பி. 1703-ஆம் ஆண்டு அதுவும் புதுப்பித்துக் கட்டப்பட்டது. தற்போது இத்தேவாலயம் தெரசா மேல்நிலைப் பள்ளியின் உட்புறம் அமைந்துள்ளது. வடக்கு தெற்காக அமைந்த இத்தேவாலயத்தின் முகப்பில் 1701 என்று ஆங்கில ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் வௌவால் மண்டபமாக இருந்த இதன் கூரைப் பகுதி தேக்கு மரங்களைக் கொண்டு ஓட்டுக் கட்டடமாக்கப்பட்டுள்ளது. இதன் உட்புறம் தீர்த்தம் வழங்க பயன்படுத்தப்பட்ட பெரிய சங்குகள் இரண்டைப் பதித்து வைத்துள்ளார்கள் தற்போது இத்தேவாலயம் வகுப்பறைகளாக மாற்றப்பட்டதால் தன் பொலிவை இழந்துவிட்டது. இத்தேவாலயத்தின்

1. Rev. Dr. W. Genisichan, The Churches in Tranquebar Then and Now, Diocesan Press, P. 16.

கிழக்குப்புறத்தில் ஒரு மண்டபத்தில் ஒரு கல்வெட்டு இருந்தது. இது கி.பி. 1689-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இக்கல்வெட்டு தற்போது இருக்குமிடம் தெரியவில்லை[1] எனினும் கி.பி. 1728-ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு போர்ச்சுக்கீசியக் கல்வெட்டினை ஒரு மரநிழலில் போட்டுள்ளார்கள்.

தரங்கம்பாடியில் டேனிஷ்காரர்களின் வருகையால் போர்ச்சுக்கீசியர்களின் எண்ணிக்கை குறைய ஆரம்பித்தபோது கத்தோலிக்க சமயம் வீழ்ச்சி அடையத் தொடங்கியது.

கி.பி. 1720-க்குப் பிறகு ஜெர்ஆப் பாதிரியார்களின் வருகையும், டேனிஷ் ஆளுநர்களுடன் இவர்கள் கொண்டிருந்த நட்பும், கி.பி. 1726-ஆம் ஆண்டு சாத்தாங்குடியில் ஒரு சேவியர் தேவாலயம் தோன்ற காரணமாயிற்று.[2]

ரோசரி தேவாலயம் என்றழைக்கப்படும் பாரிஸ் தேவாலயம் கி.பி. 1854-ஆம் ஆண்டு சி.இ.மத்தாய் என்பவரால் கட்டப்பட்டது. இத்தேவாலயம் கட்டப்படுவதற்குமுன் இத்தேவாலயத்திற்கு வடமேற்கு மூலையில் ஒரு கல் தொலைவில் பாரிச தேவாலயம் ஒன்றும் இருந்ததாகக் குறிக்கப்படுகிறது.[3]

## புராட்டஸ்டன்ட் திருச்சபை அமைப்பு

இந்தியாவில் லுத்ரன் திருச்சபையின் பிறப்பிடம் தரங்கம்பாடி என்றால் அது மிகையாகாது. கி.பி. 1620-ஆம் ஆண்டு தரங்கம்பாடி கோட்டைக் கட்டப்பட்டபோது கோட்டையின் உட்புறம் (தற்போது அகழ்வைப்பகம் உள்ள அறை) லுத்ரன் தேவாலயம் ஒன்று இயங்கி வந்துள்ளது. இதை ஜான் ஆல்ப்சன் எழுதிய குறிப்பின் மூலம் அறிகிறோம்.

---

1. James Cotton, Inscription of Tomb in and arround Madras State, 1946.
2. T. Venkasamy, ‘ A Manual of the District of Tanjore’, Madras Asylum Press - Vol. II, P. 275
3. Tamilarasi, The History of Therasa’s Girls School, M.A. Dissertation, P. 4

கோட்டைக்கு முன்புறம் உள்ள சியோன் தேவாலயம் கி.பி. 1701-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இதில் டேனிஷ்காரர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மதம் மாறிய உள்நாட்டவர்கள் அனுமதிக்கப் படவில்லை.

டென்மார்க் மற்றும் நார்வே நாட்டின் முடிசூடா மன்னராக விளங்கிய நான்காம் பிரடரிக் தரங்கம்பாடியில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப விரும்பினார். இதற்காக டேனிஷ் நாட்டில் இருந்து சில மத போதகர்களைத் தேர்ந்தெடுத்து தரங்கம்பாடிக்கு அனுப்ப விரும்பினார். அவருக்கு உதவ டாக்டர் லூத்ரன் முன்வந்தார். அப்போது சீகன்பால்கு, புலுட்சோ இருவரும் ஹாலே பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார்கள். இவ்விருவரும் செர்மானிய இளைஞர்கள். இவர்களை தரங்கம்பாடிக்கு அனுப்புவது எனவும் அப்போது முடிவெடுக்கப்பட்டது.

## பார்தலோமியஸ் சீகன்பால்குவின் தமிழ்த்தொண்டு

இவர் கி.பி. 1682-ஆம் ஆண்டு சூன் மாதம் 28-ஆம் நாள் செர்மனி நாட்டில் சுசோனியா நகரில் உள்ள பாலஸ்னித்ஸ் என்ற ஊரில் பிறந்தவர். இவருடைய தாய் சீகன்பால்குவை அழைத்து தன் வேத புத்தகத்தை மகனின் கையில் கொடுத்து, “தம்பி! மகா பெரிய புதையலை உன் கையில் தருகிறேன்” என்றாராம்.

கி.பி. 1706-ஆம் ஆண்டு சூலை மாதம் 9-ஆம் நாள் மன்னரின் அனுமதி பெற்று புலுட்சோ என்பவருடன் தரங்கம்பாடி வந்திறங்கினார்.[1] அவர்கள் வந்திறங்கிய இடத்தில் நினைவுத்தூண் ஒன்றும் உள்ளது. தரங்கம்பாடியில் இவர்கள் அமைத்த திருச்சபைக்கு “டேனிசு ஹாலே திருச்சபை” என்ற பெயர் வழங்கப்பட்டது.

சீகன்பால்கு தரங்கம்பாடி வந்த சில ஆண்டுகளிலேயே தமிழை முறையாக எழுதவும், பேசவும் கற்றுக்கொண்டார். தமிழ் நூலகம் ஒன்றையும் உருவாக்கினார். இவரால் சேகரிக்கப்பட்ட தமிழ் நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் தற்போது ஹாலே பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழ் நூல்களை நான்கு வகைகளாகப் பகுத்துள்ளனர். முதல் பிரிவில் 14 புத்தகங்கள் உள்ளன. இவை

1. J. F. Fenger, ‘History of the Tranquebar Mission’ M.E. Press, Madras -8, P. 17

சீகன்பால்கு தன் கைப்பட எழுதிய நூல்களாகும். அடுத்துள்ள 21 புத்தகங்கள் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையார் எழுதியவை. மூன்றாவதாக இந்து மதத் தொடர்பான நூல்களாகும் நான்காவது பிரிவில் 11 புத்தகங்கள் உள்ளன. இவை முகலாய மதத்தினர் தம் மதத்தைப் பற்றி எழுதிய நூல்களாகும்.

முதலில் இவர் தமிழைப் படிக்கத் தொடங்கினார். தனக்கு உதவியாக தமிழும், ஆங்கிலமும் கற்ற 3 எழுத்தர்களை நியமனம் செய்து கொண்டார். 40,000 சொற்களைக் கொண்ட தமிழ் அகராதியை "மலபார் அகராதி" என்ற பெயரில் வெளியிட்டார்.[1] இதற்கு உதவியாக கி.பி. 1717-இல் வெள்ளைத் தாள்களின் தேவை அதிகரித்தபோது பொறையாற்றில் இருந்த அட்லரின் காகிதப் பட்டறையில் இருந்து தமக்கு வேண்டிய தாள்களை வாங்கிக் கொண்டார்.

பைபிளின் ஒரு பகுதியான - புதிய ஏற்பாடு என்பதை "அஞ்சு வேதப் புத்தகம்" என்ற பெயரில் மொழிப்பெயர்த்து முதலில் வெளியிட்டார். மத போதகர்களை உருவாக்க இறையியல் கல்லூரி ஒன்றையும் தரங்கம்பாடியில் நிறுவினார். கி.பி. 1708-இல் 100 இந்துக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். இவர் புதிய ஏற்பாட்டை கி.பி. 1711-இல் தமிழில் மொழி பெயர்த்தபோது, டேனிஷ் ஆளுநர் இவரை சிறையில் அடைத்தார்.

கத்தோலிக்க பாதிரியார் ஜே. பாதர், டேனிஷ் ஆளுநரின் நெருங்கிய நண்பர் சீகன்பால்குவின் ஆன்மீகக் கொள்கையில் ஈடுபாடு கொண்ட கத்தோலிக்கர்கள் பலர் புராட்டஸ்டன்ட் திருச்சபையில் சேரத் தலைப்பட்டனர். இதனால் கோபமுற்ற ஜே. பாதர் பாதிரியார், சீகன்பால்குவுக்கு பல தொல்லைகள் கொடுத்ததோடு சிறையில் அடைக்கவும் காரணமாக இருந்தார். இரண்டு திங்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்ட சீகன்பால்கு நான்காம் பிரடரிக்கின் ஆணையின்படி விடுதலை செய்யப்பட்டார். அவருக்குத் தேவையான உதவிகளையும் உடன் இருந்து உதவவேண்டும் என ஆளுநருக்கு உடனடி உத்தரவு வந்தது.

1. Dr. R. Nagaswamy, 'Tharangambadi' State Dept. of Archaeology of Bub; Madras-28, P. 8

சீகன்பால்கு சிறையில் அடைக்கப்பட்ட இடம் கோட்டைக் கீழ்தளத்தில் உள்ள சமையல் அறைக்கும் ஒயின் அறைக்கும் இடையில் இருந்தது என டேனிஷ் ஆவணங்கள் கூறுகின்றன. இந்த இடத்தையும் பயணிகள் பார்வையிடலாம்.

இறுதியாக கி.பி. 1719-ஆம் ஆண்டு பிப்ரவரி 23-ஆம் நாள் தனது 37-வது வயதில் கொடிய நோயினால் அவதியுற்று மரணம் அடைந்தார். இவரைப் புதிய எருசலேம் ஆலயத்தினுள் பலிபீடத்தின் முன் அடக்கம் செய்துள்ளனர். இவருடைய கல்லறையில் இவருடைய வரலாற்றை எளிமையாகவும், இனிமையாகவும் படிப்போர் மனங்கவரும் வண்ணம் கல்லில் வெட்டி வைத்துள்ளனர்.

## கல்வெட்டு வாசகம்:

Rev. Barthalomaus Ziegenbalg

1719

Provost Barthalomaus Ziegenbalg First Lutheran Missionary to India Born 1682 at Palsnitz, Germany, Called from Halle, Supported by Danish King arrived at Tranquebar with Rev. Plutchau, July 9, 1706 Established First Protestant congretation founded school, Orphanages seminary, press produced the first Tamil New Testament 1715 Built, Dedicated this New Jerusalem Church this October 11, 1719.

Friend of the Poor, Tamil Scholar, Pioneer Evanglist, Spent himself in his Master service died in Harness Feb. 23, 1719. His mortal Remains Burried here.

- T.E.L.C. Women

சீகன்பால்கு பாதிரியார் தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்று கொண்டார். ஆங்கிலமும் நன்கு அறிந்த தமிழ் ஆசிரியர்களிடமிருந்து தமிழ்மொழியை நன்கு கற்றார். தமிழ்மொழி வாயிலாகவே எளிதில் தமிழ்நாட்டில் கிறிஸ்தவத்தைப் பரப்ப இயலும் என உணர்ந்தார்.

அதுநாள்வரை ஓலைச்சுவடிகளிலும் காகிதத்திலும் கையால் எழுதிக் கற்று வந்தனர். எனவே 1713-இல் ஜெர்மனியில் இருந்து வடிவமைத்த தமிழ் அச்சு எந்திரத்தை வரவழைத்தார். இதன்பிறகே தமிழில் பல நூல்கள் அச்சாகி வெளிவரத் தொடங்கின. தமிழ் மொழிக்கும் நிலையான வரிவடிவம் கிடைத்தது எனலாம்.

தமிழ்மொழிக்கு தொண்டு செய்த பாதிரியார்கள் மூவரில் ஒருவர் சீகன்பால்கு.

1. பெஸ்கி எனும் வீரமாமுனிவர் (தேம்பாவணி எழுதியவர்)

2. ராபர்ட் கால்டுவெல் போப் பாதிரியார் (ஒப்பிலக்கணம் எழுதியவர்) என்பவர்கள் வரிசையில் அவர்கட்கு ஒப்பாக மூன்றாவதாக வைத்து போற்றத்தக்கவர் (3) பாத்தலோமியஸ் சீகன்பால்கு பாதிரியார் ஆவார். அவர் நமது தேசியக் கவிஞர் பாரதியாரைப் போல் இளம் வயதில் மறைந்துவிட்ட பேரறிஞர் ஆவார். இவருக்கு டோரத்தி என்ற மனைவியும் ஒரு மகளும் உண்டு. அவர்களும் இறந்த பின்னர் புதிய எருசலேம் ஆலய வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டனர். தமிழ் மொழிக்கு முதலில் அச்சு இயந்திரம் வடிவமைத்து, தமிழில் பல நூல்கள் வெளிவர பெரும் முயற்சி செய்தவர் என்ற பெருமைக்குரியவர் ஆவார்.

லூத்ரன் திருச்சபையில் பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் சிலர்:

## புலுட்சோ

சீகன்பால்குவின் உடன் வந்த சிலர் போர்ச்சுக்கல் மொழியில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அம்மொழியைக் கற்று திருத்தொண்டு ஆற்றினர். அவர்களுள் முக்கியமானவர் புலுட்சோ ஆவார். இவர் சீகன்பால்குவின் காலத்திற்குப் பிறகும் தரங்கம்பாடியில் தங்கி மதமும் தமிழும் பரப்பினார்.

## ஜே.பி. எச். பெப்ரிசியஸ்

இவர் தரங்கம்பாடியில் கி.பி. 1740 முதல் 1742 வரை இருந்தவர். இவர் ஜெர்மனியில் இருந்த வேதாகம நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். பெப்ரிசியஸ் அகராதி இவரால் தயாரிக்கப்பட்டது.

**ஜே.பி. ரோட்லர்** (1776 - 1803)

தமிழ் அகராதியைப் பல தொகுதிகளாகப் பிரித்து வெளியிட்டவர்.

**சுவார்ட்சு பாதிரியார்**

மராட்டிய அரசர் துளசாவின் நெருங்கிய நண்பரான இவர் கி.பி. 1750-ஆம் ஆண்டு தரங்கம்பாடி வந்தார். தரங்கம்பாடியில் 16 ஆண்டுகள் தங்கியிருந்து சமயப் பணிகள் ஆற்றியுள்ளார். துளசாவின் தம்பி அமர்சிங் அரசரானதால் இரண்டாம் சரபோசியை சுவார்ட்சு பாதிரியாரே தம் பாதுகாப்பில் வளர்த்து வந்தார். கிழக்கிந்திய கம்பெனியாருடன் வாதாடி கி.பி. 1796-ஆம் ஆண்டு சரபோஜியை அரசராக்க உதவியவர் இவரே. டேனிஷ் திருச்சபையின் சார்பில் கடைசியாக வந்த போதகர் ஏ.எப். கேமெதர் ஆவார்.

இதுவரை தரங்கம்பாடியில் திருச்சபைகளின் பங்கு பற்றி சுருக்கமாக அறிந்தோம். அடுத்து டேனிஷ் கோட்டையின் வரலாற்றைச் சுருங்கக் காண்போம்.

---

1. Arno Lehmann, 'It Began at Tranquebar' - P. 30, C.L.S. 1959

# டேனிஷ் கோட்டை கட்டட அமைப்பு

ஓவ் கிட்டி ஒப்பந்தப்படி தரங்கம்பாடியில் கோட்டைக் கட்டிக் கொள்ள டேனிஷ் கம்பெனிக்கு அனுமதி கிடைத்தவுடன் கி.பி. 1620-ஆம் ஆண்டு கோட்டைக் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அதிக முதலீடின்றி வந்த டேனிஷ் வர்த்தகக் கம்பெனி, ரகுநாத நாயக்கரின் உதவியோடு கோட்டைக் கட்டும் பணியினை இரவு பகலாக மேற்கொண்டது.

கி.பி. 1622-ஆம் ஆண்டுக்குள், உட்புறம் முக்கியமான கட்டடப் பகுதிகள் கட்டி முடிக்கப்பட்டன. கி.பி. 1623-ஆம் ஆண்டு வரை தரங்கம்பாடி நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்க ரகுநாத நாயக்கர் ஒரு பணியாளரை தரங்கம்பாடிக்கு அனுப்பியிருந்தார். கி..பி. 1646-ஆம் ஆண்டு கோட்டை முற்றிலும் கட்டி முடிக்கப்பட்டது. கோட்டை சுமார் 2½ ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்தது.

கி.பி. 1730-ஆம் ஆண்டு வரையப்பட்ட கோட்டையின் வரைபடம், 17-ஆம் நூற்றாண்டில் இருந்த கோட்டையின் அமைப்பை நமக்கு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. கோட்டை மதிலை ஒட்டி நான்கு மூலையிலும் தாமரை மொட்டைப் போன்ற பிதுங்கிய அமைப்புகள் காணப்பட்டன. கோட்டையின் முதல் சுற்றுக்கு வெளியே பெரிய அகழி இருந்தது. இந்த அகழிக்கு வேண்டிய தண்ணீரை உப்பன் ஆற்றில் இருந்து கொண்டு வந்தனர். இவ்வாற்றில் ஒரு கால்வாய் வெட்டி கோட்டையின் தென்மேற்கு மூலையில் இருந்த மதகின் வழியாக அகழியில் தண்ணீர் பாயும்படி வசதி செய்திருந்தார்கள். அகழியை அடுத்து பெரிய மதில் ஒன்று இருந்தது. இந்த வெளி மதில் தற்போதுள்ள அணிவகுப்பு மைதானத்தின் நடுப்பகுதியில் அமைந்திருந்தது. இம்மதிலில் இருந்து கோட்டைக்குச் செல்ல பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அதுவும் தற்போது அகழாய்வு செய்து வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

கோட்டையின் நான்கு மூலையிலும் இருந்த தாமரை மொட்டு போன்ற பிதுங்கிய பகுதிகளில் அதாவது வடமேற்கு மொட்டுப் பகுதியிலும், தென்கிழக்கு மொட்டுப் பகுதியிலும் இரண்டு

ஓட்டுக் கட்டடங்கள் இருந்தன. இவை இரவு, பகல் கோட்டைப் பாதுகாவலில் ஈடுபட்டிருக்கும் காவலர்களின் அறைகளாக இருந்துள்ளன.

## கிடங்குப் பகுதி

இரண்டு அடுக்குகளைக் கொண்ட கோட்டையின் கீழ் உள்ள மூன்று விசாலமான அறைகள் பொருள் வைப்புக் கிடங்குகளாகும். உள்நாட்டில் இருந்து சேகரிக்கப்பட்ட பொருட்களைச் சேகரித்து வைக்கவும். வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்படும் பொருட்களை சேமித்து வைக்கவும் இந்த கிடங்குகள் பயன்பட்டன. இந்தக் கிடங்குகளின் நடுவில் உள்ள 16 அடி சுற்றளவுள்ள பெரிய தூண்கள்தான் முதல் தளத்தைத் தாங்கி நிற்கின்றன.

## அலுவலக அறைகள்

இக்கிடங்கின் மேற்பகுதியில் அமைந்துள்ள 5 அறைகளும் முறையே

(1) கவர்னர் அறை (தற்போது காப்பாட்சியரின் அலுவலகமாக இருப்பது)

(2) பாதிரியாரின் அறை

(3) சியோன் தேவாலயம் (அருங்காட்சியகம் உள்ள அறை)

(4) படைத்தலைவரின் அறை

(5) சாப்பாட்டு அறை (சமையல் கூடம் - புகைப் போக்கியுடன்)

என அமைந்திருந்தன. சமையல் அறை நீண்ட மேடையுடன் அமைந்திருந்தது. இன்றும் புகைப் போக்கியுடன் அந்த அறை காணப்படுகிறது.

## கோட்டையின் உட்புறம் உள்ள அறைகள்

கோட்டையில் உட்புறம் மைதானத்தில் நுழைவாயிலை ஒட்டி 8 அறைகளும், மேற்குப்புறம் மதிலை ஒட்டி எட்டு அறைகளும் இருந்தன. இவை வீரர்கள் தங்கும் அறைகளாக இருந்தன. கி.பி. 1800-ஆம் ஆண்டு கோட்டை திருத்தி அமைக்கப்பட்டபோது, வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் இருந்த 16 அறைகளும், நான்கு மூலைகளிலும் இருந்த தாமரை மொட்டு போன்ற மதிற் பகுதியும் அகற்றப்பட்டது. அதன் மேற்புறம் இருந்த அறைகளும் அகற்றப்பட்டு கோட்டை மதில் சதுர வடிவமாக்கப்பட்டது.

தற்போது கோட்டையின் தென்புற மதிலை ஒட்டி உட்புறம் 9 அறைகள் உள்ளன. இவற்றுள் கிடங்கை ஒட்டி இருக்கும் இரு அறைகளும் ஒயின் அறை (மதுபானக் கிடங்கு) யாகச் செயல்பட்டன. இவற்றுள் உட்புறமாக ஒரு அறையில் இருந்து மற்றொரு அறைக்குச் செல்வதற்கு கதவுகள் இருந்தன. இதை அடுத்து அமைந்த அறை சமையல் அறையாக இருந்து வந்தது. சமையல் அறையை அடுத்து மேற்குப்புறம் இருந்த அறை வாத்துக்கள் அடைத்து வைக்கும் அறையாகும். இதையொட்டி மேற்குப்புறம் இருந்த நான்கு அறைகளும் வீரர்கள் தங்குவதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. சமையல் அறைக்கும், ஒயின் அறைக்கும் இடையே இருந்த அறைதான் சிறைச்சாலையாக இருந்தது எனக் குறிக்கப்படுகிறது. சீகன்பால்கு இந்த அறையில்தான் இரண்டு திங்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தார் எனக் குறிக்கிறார்கள்.

## சுருங்கை வழி

தென்புற மதிலை ஒட்டி மையப்பகுதியில் ஒரு நீண்ட சுருங்கை வழியைக் காணலாம். இதன் வழியாகத்தான், கோட்டைக்கு வேண்டிய தண்ணீரை (உப்பனாற்று நீரை) உள்ளே கொண்டு வந்தார்கள். மழைக்காலங்களில் மழைநீரை வெளியேற்றும் வடிகாலாகவும் அது பயன்பட்டு வருகிறது.

## சுரங்க அறைப் பாதை

கோட்டையின் தென்மேற்கு மூலையில் ஒரு சுரங்க வழியைக் காணலாம். இது தஞ்சாவூர் வரை நீண்டு செல்வதாக கற்பனையாக மக்கள் பேசி வருகிறார்கள். இந்த சுரங்க வழியில் உட்புறம் அதாவது தாமரை மொட்டு போன்ற பகுதியில் கீழ்ப்புறமாக ஒரு நிலவறை இருந்தது. இதில்தான் துப்பாக்கி தோட்டாக்கள், போர் ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன. இச்சுரங்க வழியின் நடுப்பகுதியில் கிணறு ஒன்றும் இருந்தது. இதில்தான் துப்பாக்கி மருந்து அடங்கிய பீப்பாய்களை இறக்கி மேல்புறம் மூடி போட்டிருந்தனர். பாதுகாப்பு கருதியும், தட்பவெப்பநிலை விபத்துக்கள் ஏற்படாமல் இருக்கவும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தென்புற மதிலை ஒட்டி நடுப்பகுதியில் அமைந்திருந்த சுருங்கை வழி கப்பலில் வரும் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளவும் பொருட்களை ஏற்றுமதி செய்யவும் பயன்பட்டது.

## கோட்டை நுழைவாயில்

தற்போது கோட்டையில் நடுப்பகுதியில் நுழைவாயில் இருப்பதைக் காணலாம். இந்த நுழைவாயில் கி.பி. 1800-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதாகும். இதற்கு முன் வடகிழக்கு மூலையை ஒட்டி நுழைவாயில் அமைந்திருந்தது. இந்த பாதை பாதுகாவலரின் அறையை (Security Guard) ஒட்டி முன்புறமாக அமைந்திருந்தது. தாமரை மொட்டு போன்ற பகுதி முற்றிலும் அகற்றப்பட்டபோது இந்த நுழைவாயிலையும் அடைத்துவிட்டார்கள்.

கி.பி. 1646-ஆம் ஆண்டு கோட்டை முழுவதும் கட்டி முடிக்கப்பட்டபோது, வெளுத்த மஞ்சள் வண்ணப்பூச்சும் கதவு மற்றும் சன்னல்களுக்கு சிகப்பு வண்ணமும் தீட்டப்பட்டன.

## கோட்டை மதில்

நகரைச் சுற்றிலும், கி.பி. 1600-ஆம் ஆண்டுக்கு முன்பே மதில் அமைக்கப்பட்டிருந்ததை டேனிஷ் ஆவணங்கள் கூறுகின்றன. இந்த மதில் கருங்கல்லால் அஸ்திவாரம் எடுக்கப்பட்டு மேல்புறம் மண்மேடுகள் கொண்டு அமைக்கப்பட்டது.

எஸ்கில்ட் ஆண்டர்சன் டேனிஷ் கவர்னராக பொறுப்பு ஏற்றவுடன் கி.பி. 1660-ஆம் ஆண்டு பழைய மதிலைப் புதுப்பித்தார். நகரைச் சுற்றிலும் 4 திசைகளிலும் பெரிய 4 பீரங்கி மேடைகளை அமைத்தார்.[1]

ஊரைச் சுற்றி அமைந்திருந்த இந்த மதில் சுவர் கி.பி.1704 வரை தொடர்ந்து இருந்தது. இவை கி.பி. 1704-ஆம் ஆண்டு மாற்றப்பட்டு செங்கல் சுவர் எடுக்கப்பட்டது. இதன் உட்புறமாக அமைந்திருந்த மண்மேடுகள் முற்றிலும் அகற்றப்பட்டன. பீரங்கி மேடையும் சீரமைக்கப்பட்டது. இந்தப் பணிகள் திரு. ஜோர்கன் ஆளுநராக இருந்த காலத்தில் நடைபெற்ற பணியாகும். ஐதர் அலியின் படையெடுப்பின் காரணமாக அஞ்சிய டேனிஷ் அரசு மதிலை மேலும் சீரமைக்க விரும்பி கி.பி. 1780 -ஆம் ஆண்டு சில பராமரிப்புப் பணிகளைச் செய்துள்ளனர்.[2]

---

1. N.Ravichandra, Tranquebar - A Study P.G. Dissertation, P.21
2. Tranquebar Documents, 1671-1750 A.D. The Records of the Asiatic Company No. 1446, National Archieves.

## கட்டடக் கலைப்பாணி

தஞ்சை மராட்டியர் கலைப்பாணியும், டேனிஷ் கட்டடக் கலைப்பாணியும் இணைந்த கட்டடக் கலைப்பாணியை டேனிஷ் கோட்டையில் காணமுடிகிறது. கட்டடத்தின் கூரைப்பகுதி நாயக்கர் கால மண்டப அமைப்பில் அமைக்கப்பட்டிருந்தது. கோட்டைக் கதவு மற்றும் ஜன்னல்களின் மேற்புறம் கருங்கல் பலகை பாவப்பட்டுள்ளன. இரண்டு மண்டபக் கூரையும் இணையும் இடங்களில் உறுதியான அகண்ட தூண்கள் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் நாயக்கர் கால தூண்களை ஒத்து உள்ளன. கோட்டையின் முன்புறம் உள்ள வசந்த மண்டபம், ஜன்னல், கதவுகள், கொடிக்கம்பம், மேடை, கோட்டைக்காவலர் மண்டபம் யாவும் டேனிஷ் கலைப்பாணியைக் கொண்டு விளங்கின. சமையல் அறையில் உள்ள புகைபோக்கியும், சமையல் மேடையும், இந்திய கலைப்பாணியில் இருந்து மாறுபட்டு விளங்குவதைக் காணலாம். கோட்டையின் முதல் தளத்தின் கிழக்கு மற்றும் மேற்குப்புறச் சுவர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கூர்முனை கூம்பு வடிவங்கள் உள்ளன. இவை முற்றிலும் டேனிஷ் கட்டடக் கலையாகும்.

தஞ்சை மண்டலத்தை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்களும் அவர்களுக்கு தரங்கம்பாடிக்காக வாடகை செலுத்திய டேனிஷ் பேரரசர்களின் பட்டியலும் கீழே காணலாம்.

## தஞ்சை மராட்டிய மன்னர்களும் டேனிஷ் அரசர்களும்

| | | |
|---|---|---|
| 1. ரகுநாத நாயக்கர் (1600 - 1634) | - | நான்காம் கிறிஸ்டியான் (1588 - 1648) |
| 2. விஜயரகுநாத நாயக்கர் (1634 - 1674) | - | மூன்றாம் பிரடரிக் (1648 - 1670) |
| 3. முதலாம் ஏகோசி (1674 - 1712) | - | ஐந்தாம் கிறிஸ்டியான் (1670 - 1699) |
| 4. இரண்டாம் சாசி (1684 - 1712) முதலாம் சரபோஜி (1712 - 1728) | - | நான்காம் பிரடரிக் (1699 - 1730) |

| | | |
|---|---|---|
| 5. முதலாம் துளசாசி (1729 - 1736) | | |
| ஏகோசி | | |
| (1736 - 37) | - | ஆறாம் கிறிஸ்டியான் |
| காட்டு ராஜா | | (1730 - 1746) |
| (1739) | | |
| மூன்றாம் சாசி | | |
| (1739) | | |
| 6. பிரதாப் சிங் | - | ஐந்தாம் பிரடரிக் |
| (1739 - 63) | | (1746 - 1766) |
| 7. இரண்டாம் துளசாசி | | |
| (1763 - 1787) | - | ஏழாம் கிறிஸ்டியான் |
| அமர் சிங் | | (1766 - 1808) |
| (1787 - 1798) | | |
| 8. இரண்டாம் சரபோசி | - | ஆறாம் பிரடரிக் |
| (1798 - 1832) | - | (1808 - 1839) |
| 10. இரண்டாம் சிவாசி | - | எட்டாம் கிறிஸ்டியான் |
| (1832 - 1855) | | (1840 - 1848) |

## தரங்கம்பாடி ஆளுநர்கள் (கவர்னர்கள்)

கி.பி. 1624-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1845-ஆம் ஆண்டு வரை டேனிஷ் கோட்டையில் இருந்து ஆட்சி செய்த ஆளுநர்களின் எண்ணிக்கை - 52. அதன் பட்டியலும் அவர்களின் ஆட்சியாண்டும் பின்வருமாறு :

கி.பி. 1801 - 02 மற்றும் 1808 - 15 ஆண்டுகளில் ஆங்கிலேயர் களின் பிடிக்குள் இக்கோட்டை இருந்துள்ளது. எனவே இக்காலகட்டத்தில் கவர்னர்கள் இல்லை.

1. ஓவ் கிட்டி - (கி.பி. 1620 - 1621)
2. ரோலண்ட் கிரேப் - (கி.பி. 1621 - 36)
3. பெண்ட் பெசார்ட் - (கி.பி. 1636 - 43)

4. லியால் - (கி.பி. 1643 - 48)
5. போவல் கான்சன் - (கி.பி. 1648 - 55)
6. இ. ஆண்டர்சன் - (கி.பி. 1655 - 69)
7. என்றி எக்கர் - (கி.பி. 1969 - 73)
8. எஸ். அட்லர் - (கி.பி. 1673 - 80)
9. பீட்டர் பிலட் - (கி.பி. 1680 - 81)
10. ஆஞ்சல் சூல் - (கி.பி. 1681 - 86)
11. உல்ப் - கென்ரிச் - (கி.பி. 1686 - 87)
12. கிறிஸ்டியான் போர்க் - (கி.பி. 1687 - 89)
13. ஜே.பி. சான்சன் - (கி.பி. 1689 - 91)
14. மோரிட் கார்ட்மன் - (கி.பி. 1690)
15. கிறிஸ்டியான் போர்க் - (கி.பி. 1690 - 94)
16. கிலஸ் வோக் - (கி.பி. 1694 - 1701)
17. ஆண்டஸ் ஆன்ரே - (கி.பி. 1701)
18. மைக்கேல் குரோன் - (கி.பி. 1701 - 02)
19. ஜோர்கன் கர்மான்சன் - (கி.பி. 1701 - 04)
20. ஜான் சிக்ஸ்மண்ட் காசியஸ் - (கி.பி. 1704 - 16)
21. கிறிஸ்டியான் பர்ன் - லண்டிகார்ட் - (கி.பி. 1716 - 20)
22. கிறிஸ்டியான் உப்ரிச் நிசன் - (கி.பி. 1720 - 26)
23. கான்சன் அட்ரூப் - (கி.பி. 1726 - 30)
24. டிட்ரிச் முகலன் போர்ட் - (கி.பி. 1730 - 33)
25. பவுல் கிரிஸ்க் பாங்க் - (கி.பி. 1733 - 41)
26. இவர் போன்சாக் - (கி.பி. 1741 - 1744)
27. சி. கார்ஸ்டன் சன் - (கி.பி. 1744 -
28. போன் சாக் - (கி.பி. 1744 - 54)
29. சியார்ச் குரோக் - (கி.பி. 1754 - 59)
30. பீட்டர் கென்ரிக் மேயர் - (கி.பி. 1759)

31. கிறிஸ்டியான் பிரடரிக் - (கி.பி. 1759 - 60)
32. சேக்கப் போர்க் - (கி.பி. 1760 - 61)
33. பீட்டர் கெர்மன் அப்போஸ்தி - (கி.பி. 1761 - 75)
34. டேனிசு பிரவுன் - (கி.பி. 1775 - 79)
35. பீட்டர் கெர்மன் அப்போஸ்தி - (கி.பி. 1779 - 83)
36. ஜான் பீட்டர் லிக்கன்ஸ்டின் - (கி.பி. 1783 - 85)
37. பீட்டர் ஆப்பேரஸ்தி - (கி.பி. 1785 - 86)
38. அடால்ப் ரஸ்டார்ப் - (கி.பி. 1786)
39. கர்மன் அப்போஸ்தி - (கி.பி. 1786 - 88)
40. பீட்டர் ஆங்கர் - (கி.பி. 1788-1801)
ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பு - (கி.பி. 1801 - 02)
41. பீட்டர் ஆங்கர் - (கி.பி. 1802 - 06)
42. பீட்டர் கெர்மான்சன் - (கி.பி. 1806 - 08)
ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பு - (கி.பி. 1808 - 15)
43. சேவர்ட் பெல்லி - (கி.பி. 1815 - 16)
44. பீட்டர் ஏர்மான்சன் - (கி.பி. 1816 - 22)
45. சீன்சு கோபட் - (கி.பி. 1822 - 23)
46. உல்ரிச் ஆன்தோன் ஸ்கன்கேடர் - (கி.பி. 1823 - 25)
47. பிரிஞ்ச் -இசட்லின் - (கி.பி. 1825 - 29)
48. கிரிஸ்டென்சென் - (கி.பி. 1829 - 32)
49. கென்ராப் எமில் மாரியர் - (கி.பி. 1832 - 38)
50. சான்சு வான் ரிக்லிங் - (கி.பி. 1838 - 41)
51. கிறிஸ்டியான் டிம்ரோ - (கி.பி. 1841)
52. பீட்டர் கேன்சன் - (கி.பி. 1841 - 45)

இவர்களுள் பீட்டர் ஆங்கர், காரிசன் (1654 - 55) முதலிய ஆளுநர்கள் குறிப்பிடத்தக்க பல தொண்டுகள் செய்துள்ளனர்.

# கி.பி. 1767-இல் தரங்கம்பாடி நகரத்தின் அமைப்பு

கி.பி. 1767-இல் தரங்கம்பாடி நகரம் எப்படி இருந்தது என்பதை அறிந்துகொள்வதற்கு அக்காலக்கட்டத்தில் வரையப்பட்ட முப்பரிமாண வரைபடம் ஒன்று நமக்கு பெரும் உதவியாக இருக்கிறது.

நகரின் நுழைவாயில் தற்போது கிழக்கு திசையில் உள்ளது. கி.பி. 1767-க்கு முன் வடக்கு திசையில் அமைந்திருந்தது. கோட்டைக்கு வருவோர் இவ்வடக்கு வாயிலில் நுழைந்து ராணி தெருவின் வழியாகத்தான் உள்ளே வரவேண்டும். வடக்கு நுழைவாயிலில் 3 நிலைகளைக் கொண்ட மண்டபம் ஒன்றும் காட்சியளித்தது.

## நகரச் சுற்று மதில்

நகரைச் சுற்றிலும் செங்கல்லால் ஆன மதில் அமைக்கப்பட்டது. மதிலில் 10 அடி அகலமான பாதை ஒன்றும் இருந்தது. மதிலைச் சுற்றிலும் 11 பீரங்கி மேடைகள் அமைக்கப் பட்டிருந்தன. கடற்கரைப் பகுதியில் 4 பீரங்கி மேடைகள் இருந்தன. இவை நீண்ட சதுர வடிவில் இருந்தன. ஒவ்வொரு பீரங்கி மேடையும் ஏறக்குறைய 200 அடி நீளமும், 100 அடி அகலமும் கொண்டிருந்தன. இந்நிலைக்கு மேடைகளிலும் முறையே 10,7,7,3 என்ற எண்ணிக்கையில் சிறிய ரக பீரங்கி வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. வடக்கு திசையில் இருந்த ஒரு பீரங்கி மேடையில் 12 பீரங்கிகள் அணிவகுத்திருந்தன. இம்மேடை நகர நுழைவாயிலை ஒட்டி அமைந்திருந்தது.

கிழக்கு திசையில் 3 பீரங்கி மேடைகள் அணி செய்தன. இவற்றுள் மொத்தம் 26 சிறிய ரக பீரங்கிகளும், இரண்டு கனரக பீரங்கிகளும் நிறுத்தப்பட்டு இருந்தன. தென்திசை மதிலில் இரண்டு

பீரங்கி மேடைகள் இருந்தன. இவற்றுள் 18 பீரங்கி வண்டிகள் நின்றிருந்தன. மேற்கு திசையைத் தவிர பிற திசைகளில் இருந்த மேடைகள் கூம்பு வடிவில் வடிவமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பீரங்கி மேடைக்கும் டேனிசு மன்னர்களின் பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. இம்மேடையில் நிழல்தரும் மரங்களும் நடப்பட்டிருந்தன. நகரத்தில் மதிலைச் சுற்றிலும் உட்புறமாக நிழல் தரும் மரங்கள் வரிசையாக நடப்பட்டிருந்தன. ஒவ்வொரு பீரங்கி மேடையிலும் டேனிசு கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. தற்போதுள்ள ராணித் தெரு அன்று பிரின்ஸ் பிரடரிக் தெரு என அழைக்கப்பட்டது. சில தெருக்களுக்கு ஆர்கன்ஸ் தெரு (பார்கன் தெரு), கோல்டன் லூயிஸ் தெரு (பெருமாள் கோயில் தெரு), நிக்கன் தெரு (நகுதா தெரு), ஆஸ்டர் தெரு (பள்ளிவாசல் தெரு) என பெயர் வழங்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள போஸ்டாபீஸ் தெரு (பிள்ளையார் கோயில் தெரு) என அழைக்கப்பட்டுள்ளது.

கோட்டையின் முன்புறம் உள்ள மைதானத்தில் 100-க்கும் மேற்பட்ட நிழல் தரும் மரங்கள் இருந்தன. இம்மைதானத்தில் 3 குடிநீர்க் கிணறுகளும், ஒரு கொடிக்கம்ப மேடையும் இருந்தது. கோட்டைக்குள் செல்ல வேண்டுமானால் நீர் நிறைந்த அகழியைத் தாண்டிதான் செல்ல வேண்டும். இவ்வகழியின் மீது மதகுகளைக் கொண்ட ஒரு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. இதன் வழியாகத்தான் கோட்டைக்குள் நுழையமுடியும். இவ்வாயிலை நோக்கி 3 பீரங்கி வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. கோட்டையின் உட்புற மைதானத்தில் 16 நிழல் தரும் மரங்கள் வரிசையாக நடப்பட்டிருந்தன. பல தென்னை மரங்களும் நின்றன.

கோட்டையின் நான்கு மூலையிலும், தாமரை மொட்டு போன்ற பகுதிகளில் மதிலை ஒட்டி சிறுசிறு மண்டபங்கள் இருந்தன. கோட்டை மதிலில் 6 கொடிகளும், கோட்டையின் உச்சியில் இரண்டு கொடிகளும் பறக்கவிடப்பட்டன. கோட்டையின் தென்புறம் அகழியைத் தாண்டி வெளியேச் செல்ல 4 மதகுகளைக் கொண்ட ஒரு பாலம் அமைக்கப்பட்டிருந்தது.

நகரில் மதிலைச் சுற்றிலும் பீரங்கி மேடையில் மட்டும் இன்றி இடையிடையே மதிலில் பல பீரங்கிகள் காணப்படுகின்றன. ஏறக்குறைய இவர்களது பாதுகாப்புப் படையில் 100-க்கும் மேற்பட்ட பீரங்கிகள் இருந்துள்ளது. இவற்றுள் இரண்டு பெரிய வகை பீரங்கிகள் தற்போது சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் பார்வைக்கு நிறுத்தப்பட்டுள்ளன. மூன்று பீரங்கிகள் தற்போது அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மராட்டிய மன்னர்கள் ஆயிரம் துப்பாக்கிகளை கடனாகக் கேட்குமளவுக்கு இவர்கள் படை வலிமைப் பெற்று விளங்கியிருந்தார்கள் என்பதும் புலனாகிறது.

இனி வரும் பகுதியில் டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைப் பற்றிச் சுருங்கக் காண்போம்.

# டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகம்

## (காட்சிப் பொருட்கள்)

டேனிஷ் விற்பனை ஒப்பந்தத்தின்படி தரங்கம்பாடியை 12½ லட்ச ரூபாய்க்கு விலைக்கு வாங்கிய பிரிட்டிசார், கோட்டையை மாவட்ட சிறைச்சாலையாகப் பயன்படுத்தினர். பிரிட்டிசாரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின், பொதுப்பணித்துறைக்கு கோட்டை மாற்றப்பட்டவுடன் கோட்டையில் 6 அறைகளைக் கொண்ட சுற்றுலா பயணியர் விடுதி இயங்கி வந்தது.

கோட்டையின் வரலாற்று முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பெருமுயற்சிக்குப் பின் இதை கி.பி. 1976-ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக அறிவித்தது. கோட்டைக்குள் உள்ள 1¾ ஏக்கர் நிலப்பரப்பும், கோட்டைக்கு முன்புறம் உள்ள விளையாட்டு மைதானம், கோட்டைக்குத் தென்புறம் உள்ள போர்ட் அலுவலகமும் அதற்குட்பட்ட நிலப்பகுதிகள் யாவும் இச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அரசு அறிவித்தது. இக்கோட்டையின் வரலாற்றையும், டேனிசார், தமிழகத்தில் கொண்டிருந்த தொடர்பு பற்றியும் அறிந்து கொள்வதில், வெளிநாட்டவர்களும், உள்நாட்டவர்களும் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

### கற்சிலைகள் மற்றும் செப்புத் திருமேனிகள்

டேனிஷ் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் பல ஊர்களில் உடைந்தும், சிதைந்தும் பல கற்சிலைகள் காணப்படுகின்றன. இவற்றை சேகரித்து சிற்பப் பிரிவு என்ற தனிப் பிரிவின் கீழ் வரிசைப்படுத்தி காட்சிக்கு வைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அகழ்வைப்பகத்தில் காட்சியில் உள்ள கற்சிலைகள் பற்றி இங்கே காண்போம்.

## 1. ஐயனார் கற்சிலை (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு)

பீடம் உட்பட உயரம் 105 செ.மீ.

பீடம் நீக்கி 82 செ.மீ.

நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் திருவலம்புறம் என்று வழங்கப்படும் மேலப்பெரும்பள்ளம் என்ற கிராமத்தில் வாய்க்கால் ஒன்றில் கவனிப்பார் அற்றுக் கிடந்த இச்சிலை தரங்கம்பாடி அருங்காட்சியகத்திற்கு கொண்டு வரப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

இச்சிலை செவ்வக பீடத்தின் மீது யோகாசன நிலையில் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறது. இடது கையில் உள்ள செண்டுப்படை உடைந்துள்ளது. இவ்வுருவம் விரிசடையுடன் இரு காதுகளிலும் மகரகுண்டலத்துடன் விளங்குகிறது. முகம் மிகவும் தேய்ந்து காணப்படுகிறது. பட்டையான அங்கிமார்பில் உதிரபந்தம், இடைக்கட்டு அனைத்தும் பல்லவர் காலச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சுமார் 300 கிலோ எடையுள்ளது.

## 2. சூரியன் கற்சிலை (11-ஆம் நூற்றாண்டு)

மொத்த உயரம் 85 செ.மீ.

இச்சிலை இரு கைகளைக் கொண்டது. இரு கைகளும் முழங்கைக்குப் பிறகு உடைந்துள்ளது. தலையின் பின்புறமுள்ள வட்ட பிரபையும் இடதுபுறம் உடைந்துள்ளது.

உடலில் மார்பணி, உதிரபந்தம், புரிநூல் ஆகியவை அணிசெய்கின்றன. இடை முதல் தொடை வரை ஆடை உள்ளது. சன்னவீரம் உள்ளது. இரு காதுகளிலும் மகரகுண்டலங்கள் உள்ளன. இச்சிலை இராஜராஜ சோழன் காலத்து சிற்பக்கலைக்குச் சான்றாக விளங்குகிறது.

## 3. தேவி கற்சிலை (16-17-ஆம் நூற்றாண்டு)

மொத்த உயரம் 61.5 செ.மீ.

பீடம் நீக்கி உயரம் 44.5 செ.மீ.

தரங்கம்பாடி வட்டம் எருக்கட்டாஞ்சேரியில் இருந்து சேகரிக்கப்பட்ட இக்கற்சிலை பீடம் இன்றி உள்ளது. திரிபங்க நிலையில் நிற்கிறது. இரு கைகள் உள்ளன. வலது கை லோல முத்திரையிலும், இடது கையில் தாமரையும் ஏந்தி உள்ளது. தலையில் கரண்ட மகுடம் உள்ளது. இரு காதுகளிலும் பத்ரகுண்டலங்கள் உள்ளன. மார்பில் கச்சை உள்ளது. வலது கையின் ஆட்காட்டி விரல் உடைந்துள்ளது. மார்பில் புரிநூல் உள்ளது. இச்சிற்பம் வள்ளியின் சிற்பமாகக் கருதப்படுகிறது. இக்கற்சிலை கி.பி. 16,17-ஆம் நூற்றாண்டு நாயக்கர் கால சிற்பக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## 4. தேவியின் கற்சிலை (13-ஆம் நூற்றாண்டு)

மொத்த உயரம் 95 செ.மீ.

இச்சிலை நேராக நின்ற நிலையில் நான்கு கைகளுடன் காணப்படுகிறது. பின்னிரு கைகளில் அக்கமாலையும், தாமரை மலரும் உள்ளது. முன்னிரு கைகளில் அபயம் காட்டி வரத முத்திரையுள்ளது. மார்பில் பட்டையாக 4 அணிகலன்கள் உள்ளன. மார்பில் கச்சு இல்லை. இடை முதல் கணுக்கால் வரை ஆடைக்கட்டு நீண்டு செல்கிறது. இரு காதுகளிலும் செவிப்பூவும், மகர குண்டலங்களும் உள்ளன. தலையில் ஜடாமகுடம் காணப்படுகிறது. தரங்கம்பாடி வட்டம், பெரிய மாணிக்கப்பங்கு ஐயனார் கோயிலுக்கு முன்புறம் கிடந்த இச்சிலை பொது மக்களின் பார்வைக்காக பீடம் அமைத்து இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## 5. விநாயகர் கற்சிலை (18-ஆம் நூற்றாண்டு)

மொத்த உயரம் 5 செ.மீ.

தரங்கம்பாடி பன்னீர்செல்வம் என்பவரிடமிருந்து இலவசமாகப் பெறப்பட்ட கற்சிலை இது.

## 6. குதிரை வீரன் 18-ஆம் நூற்றாண்டு

அகழ்வைப்பக சேகரிப்பில் உள்ள செப்புச் சிலைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது இது. செல்வந்தர்களின் வீடுகளில், சிறு குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருளாக இருந்துள்ளது. நான்கு

அச்சுக்களைக் கொண்ட செவ்வக பீடத்தில், முன் இரு கால்களைத் தூக்கிக்கொண்டு பாய்ந்து ஓடும் நிலையில் வார்க்கப்பட்டுள்ளது. குதிரையின் முதுகில் சவாரி செய்யும் வீரன் தலையில் தலைப்பாகையுடன், இடையில் இடைக்கட்டுடன் குதிரையின் சேணத்தைப் பிடித்த பாவனையில் வழங்கப்பட்டுள்ளது. சக்கரங்கள் இல்லை. 18-ஆம் நூற்றாண்டு மராட்டியர் கால சிற்ப அமைதியைக் கொண்டு விளங்குகிறது. தரங்கம்பாடி பகுதியில் இருந்து கிடைத்துள்ளது.

## 7. விநாயகர் சிலை (18-ஆம் நூற்றாண்டு)

இது 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட செப்புச் சிலையாகும். சுமார் 3 செ.மீட்டர் உயரம் கொண்டது. தரங்கம்பாடியில் உள்ள பழைய வட்டக் கிணறு ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டது.

## 8. ஏசுநாதர் சொருபம்

சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏசுநாதரின் சிலை இது. சிலுவையில் அறைந்திருப்பதுபோல் வழங்கப்பட்டுள்ளது. இதன் மேல்புறம் INRI என்ற எழுத்துகள் காணப்படுகிறது. 8 செ.மீட்டர் நீளம் கொண்ட இச்சிலை மேற்படி வட்டக் கிணற்றில் இருந்தே சேகரிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டுகள்

இவ்வைப்பகத்தில், தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள ஊர்களில் உள்ள கல்வெட்டுகளில் காணப்படும் சில ஊர்ப்பெயர்கள் படி எடுக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் எருக்கட்டாஞ்சேரியை - எருக்காட்டுச்சேரி எனவும், தரங்கம்பாடி சடங்கன்பாடியான குலசேகரன்பட்டினம் என்றும், தில்லையாடி தில்லையாளி நல்லூர் எனவும் குறிக்கின்றன. மாமாகுடி, அனந்தமங்கலம், நெடுவாயில் அழுந்தூர், நல்லாடை, திருக்கடவூர், ஆக்கூர், பொறையாறு போன்ற ஊர்ப் பெயர்கள், 12-13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் இருந்து பிரதி செய்து வைக்கப் பட்டுள்ளது. டேனிஷ் கல்லறையில் இருந்தும் சில கல்வெட்டுகள் பிரதி செய்து காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

மாசிலாமணி நாதர் கோயிலுக்கு முன்புறம் கடலில் இருந்து 62 செ.மீ. நீளமும் 62 செ.மீ. அகலமும் கொண்ட ஒரு கல்வெட்டு சேகரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. கலி 4884-இல் இக்கோயிலின் கொடிக்கம்பமும், தள வரிசையும் சுப்பிரமணிய செட்டியார் குமாரன் ஆபத்தாரண செட்டியார் செய்தளித்தார் எனக் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டு 13-9-1782-ஆம் ஆண்டைச் சேர்ந்தது.

## டேனிஷ் கால ஆவணங்கள்

அகழ்வைப்பக சேகரிப்பில் 100-க்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளும் 50-க்கும் மேற்பட்ட காகித ஆவணங்களும் உள்ளன. ஓலைச்சுவடிகள் பெரும்பாலும், டேனிஷ் மற்றும் பிரிட்டிஷ் ஆட்சிகால பத்திர நகல்களாகும். இவற்றின் ஒரு மூலையில் அரக்கு முத்திரையோ அல்லது ஓலையிலேயே அழுந்த பதித்த முத்திரையோ காணப் படுகின்றன. இவற்றில் சாட்சி கையெழுத்துக்கள், எழுதியோர் பற்றிய குறிப்புகளும் இடம்பெறுவதைக் காணலாம்.

## காகித ஆவணங்கள்

பெரும்பாலும் டேனிஷ் மொழியில் எழுதப்பட்டன. நிலம் மற்றும் வீடுகள் விற்பனை தொடர்பான ஓலைகள், விலைப் பிரமாணப் பத்திரங்களாகும். இவற்றுள் அரசர்களின் அரக்கு முத்திரையும், தமிழ் மொழிப்பெயர்ப்புப் பகுதியும் காணலாம். இந்த ஆவணங்களை 5 பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. டேனிசு மொழியில் மட்டுமே எழுதப்பட்டவை. (தாள் மற்றும் அரக்கு முத்திரை கொண்டவை)
2. ஒரு பகுதி தமிழும், மறு பகுதி டேனிஷ் மொழியிலும் எழுதப்பட்ட தாள் ஆவணங்கள்.
3. டேனிசு மற்றும் தமிழ் மொழியில் அச்சிடப்பட்ட பத்திரங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள்.
4. தமிழ் மற்றும் டேனிசு மொழி ஆவணங்கள், தமிழ்ப்பகுதி ஓலைச்சுவடியில் எழுதி கோர்க்கப்பட்டவை.
5. தமிழ் மொழியில் மட்டும் எழுதப்பட்ட பத்திரங்கள்.

பெரும்பாலும் எல்லா பத்திரங்களிலும் அரச முத்திரை காணப்படுகிறது. உதாரணமாக ஆறாம் பிரடரிக் கால அரக்கு முத்திரையில் அரசனின் பெயருடன் Tranquebar Det Kongel Danske Governments Shigl என எழுதப்பட்டிருக்கும். ஆவணத்தின் மீது சிறிய தாளை ஒட்டி அதில் அரக்கு முத்திரை இடும் வழக்கமும் இருந்துள்ளது.

டேனிஷ் கால ஆவணங்களில் மூன்று வகையான அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளனர்.

1. அரசரின் ஆளுகை ஆலோசகர் மற்றும் விசாரணை அதிகாரி
2. நீதி சபையின் தலைவர் (சத்தீஸ் சபை)
3. ஆளுகை ஆலோசகரின் கணக்கர்

இவர்கள் டேனிசு மொழியில் கையெழுத்துப் போடுவதோடு, தமிழ்ப் பகுதியில் தமிழிலும் கையெழுத்திட்டுள்ளனர்.

கி.பி. 1857-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட டேனிசு மற்றும் தமிழ்ப் பத்திரத்தில் விசாரணை அதிகாரி - ஏற்மான்சன் (Hermanson) என கையெழுத்திட்டுள்ளார்.

இரண்டாவது நீதிச்சபையின் தலைவர் இவற் (E-Vre) எனக் கையெழுத்திட்டுள்ளார்.

மூன்றாவதாக கணக்கர் ஆல்சே (G.M. Alse) எனத் தமிழில் கையெழுத்திட்டிருப்பதைக் காண்கிறோம்.

தமிழ் ஆவணங்களில் சில வழக்காறுகளை இங்கே காணலாம்.

1. ஊர் அளவு, வழிவழியாகப் பின்பற்றப்பட்ட நில அளவு
2. கோம்மி சியோன்
3. நிலக் கடுதாசி - அரசருக்கு உரிய நிலத்தை மேல்வாரத்துக்கு வாங்கும் பத்திரம்
4. அடையோலை - தன் பங்கு நிலத்துக்கு பெறும் அடங்கல் பத்திரம்
5. விலைக்கிரயச் சீட்டு - பிறர் நிலத்தை விலைக்கு வாங்கி பதிவு செய்யும் பத்திரம்

## தேசிய ஆவணக்காப்பக ஆவணங்களின் நகல்கள்

டென்மார்க் நாட்டில் உள்ள ராயல் ஆவணக் காப்பகத்தில் உள்ள சில அரிய ஆவணங்களை நகல் எடுத்து தரங்கம்பாடி வைப்பகத்திற்கு இலவசமாக அளித்தனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

1. கி.பி. 1668-இல் எங்கில்ட் ஆண்டர்சனை ஆளுநராக நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட ஆணை.

2. மராட்டிய மன்னர், டேனிசு ஆளுநரிடம் 5000 வராகன் கடனும் 1000 துப்பாக்கிகளும் கொடுத்து உதவும்படி எழுதிய தமிழ்க் கடித நகல்.

3. திப்பு சுல்தானின் படையெடுப்பைப் பற்றி:
   - அ) தரங்கம்பாடி பிரகாசம் பிள்ளைக்கு ரா. பிள்ளை கி.பி.1789-இல் எழுதிய கடித நகல்.
   - ஆ) தேவராயன் என்பவர் தரங்கம்பாடி வக்கீல் குலாம் முகமதுக்கு எழுதிய கடித நகல்.
   - இ) தேவராயன் தரங்கம்பாடி பிரகாசம் பிள்ளைக்கு எழுதிய கடித நகல்.
   - ஈ) சேக் இஸ்மாயில் பிரகாசம் பிள்ளைக்கு எழுதிய தமிழ்க் கடித நகல்.

4. டேனிஷ் ஆட்சி காலத்தில் தயாரிக்கப்பட்ட பல்வேறு நில வரைப்படங்களின் நகல்கள்.

5. கோட்டை, படைவீரன் மற்றும் இயற்கை ஓவியங்களின் நகல்கள்.

6. பல்வேறு நிலைகளில் வரையப்பட்ட ரதி மன்மதன் தொடர்பான ஆறு வண்ண கண்ணாடி ஓவியங்களின் படச்சுருள்கள்.

இவை யாவும் அருங்காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

தொல்லியல் துறை சமீபத்தில், "தரங்கம்பாடியின் ஓலை ஆவணங்கள்" எனும் நூலை வெளியிட்டுள்ளது. அதில் டேனிஷ் அரசு, ஆங்கில அரசு கால ஆட்சி முறை, சமுதாய மக்கள் வாழ்க்கை நிலை, வியாபாரம் போன்ற குறிப்புகள் நமக்குத் தெரியவருகின்றன.

## தரங்கம்பாடி காசுகள்

தரங்கம்பாடியிலிருந்து வெளியிடப்பட்ட காசுகளை, தரங்கம்பாடி காசுகள், இந்தோ-டேனிஷ் காசுகள் என்று அழைப்பர். கி.பி. 1637-ஆம் ஆண்டில் இருந்து தரங்கம்பாடி காசுகள் வெளியிடப்பட்டன. ஒரு காசு, இரு காசு, நான்கு காசு, பத்து காசு, என்ற நான்கு வகை செப்புக் காசுகளும், ராயலின் என்ற வெள்ளிக் காசும், ஒரு ரூபாய் என்ற வெள்ளிக் காசும் வெளியிடப்பட்டன. பகோடா என்ற தங்க காசு ஏழாம் கிறிஸ்டியான் காலத்தில் வெளியிடப்பட்டது.

நான்காம் கிறிஸ்டியானின் காலத்தில்தான் ஈயக் காசுகள் பல வகைகளில் வெளியிடப்பட்டது. டென்மார்க் நாட்டில் உள்ள ஆல்பர்க், கோகி, ஸ்காகன், ஸ்டேஜ், லிசோ, நிஸ்பி போன்ற நகரங்களின் பெயராலும் ஈயக் காசுகள் வெளியிடப்பட்டன. பெர்லன், ஈப்பிட்டர், அன்னா போன்ற பெயர் பொறித்த காசுகள் டேனிஷ் கப்பல்களின் பெயரைக் குறிப்பன.

இவைகளில் 397 வகையான காசுகள் வெளியிடப்பட்டுள்ளன. சிலவகைக் காசுகளில் ஒரு புறம் டேனிஷ் அரசரின் பெயரின் முதலெழுத்துக் காணப்படும். C4 என்று எழுதப்பட்டிருந்தால், நான்காம் கிறிஸ்டியானைக் குறிக்கும். மறுபுறம் D O C (Danish Ostindisk Company) என்ற எழுத்துக்களும் ஆண்டுக் குறிப்பும் காணப்படும். டேனிஷ் கோட்டையைக் குறித்தும் இவர்கள் காசுகள் வெளியிட்டனர். இக்காசுகளில் டேனிஷ்பர்க் என்று ஒரு புறமும் மறுபக்கம் டிராங்கோபார் என்றும் எழுதப்பட்டிருக்கும். கி.பி. 1732-க்குப் பிறகு டேனிஷ் வர்த்தகக் கம்பெனியின் பெயர், டேனிஷ் ஆசியாடிக் கம்பெனி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதால், இதற்குப்பின் வெளியிடப்பட்ட காசுகளில் D A C என்ற எழுத்துக்களைப் பொறித்துள்ளனர். கி.பி. 1777-ஆம் ஆண்டுக்குப் பிறகு தரங்கம்பாடி மன்னரின் நேரடி அதிகாரத்துக்குக் கீழ் வந்ததால், காசுகளில் கம்பெனியின் பெயர் நீக்கப்பட்டது. மன்னரின் கிரீடமும் அரசரின் பெயர் மற்றும் ஆண்டுகள் குறிக்கப்பட்டன. காசு என்ற தமிழ் சொல்லையே காஷ் (Kash) என்று வழங்கினர். இச்சொல்லே ஆங்கிலத்தில் Cash என்று வழங்கலாயிற்று.

1. ராயலின் (வெள்ளி) - 1 பணம் (F A No)
2. ராயலின் (வெள்ளி) - 2 பணம் (F A No)

1 ராயலின் - 80 செப்புக் காசு

8 ராயலின் - 1 ரூபாய்

என அளவுமுறை இருந்தது.

தரங்கம்பாடி கோட்டை வைப்பகத்தில், 400-க்கு மேற்பட்ட காசுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 200-க்கு மேற்பட்டவை டேனிஷ் காசுகளாகும். இவற்றுள் சில பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. டேனிஷ் வர்த்தகக் கம்பெனியார் தரங்கம்பாடியின் வடக்கே இரண்டு கி.மீ. தொலைவில் உள்ள ஒழுகை மங்கலம் என்ற ஊரில் நாணயம் அச்சிடும் கூடம் ஒன்றையும் (அக்க சாலை) கட்டியிருந்தனர். 1990-ல் தான் அந்த கட்டடமும் இடிந்து போயிற்று.

டென்மார்க் கோபன்கேகன் அருங்காட்சியகத்தில் காட்சியில் உள்ள தரங்கம்பாடி காசுகளின் சுண்ண வார்ப்புகளும், இக்காட்சியில் இடம்பெறுவதைக் காணலாம்.

## டேனிஷ் கால போர்க் கருவிகள்

அருங்காட்சியகச் சேகரிப்பில் 50-க்கும் மேற்பட்ட போர்க் கருவிகள் உள்ளன. டேனிஷ் ஆட்சிக்காலத்தில், மக்களாலும், வீரர்களாலும், அன்றாடம் பயன்படுத்தப்பட்டு வந்தவை அவை. இவை பெரும்பாலும் மரக் கைப்பிடியுடன் கூடியது. இரும்பினால் வடிவமைக்கப் பட்டவை. நீண்ட போர் வாள், குறுவாள், ஈட்டி, அம்பு, உறையுடன் கூடிய வாள் போன்றன காட்சிக்கு உள்ளன.

### பீரங்கிகள்

கோட்டை மதில் சுவரில் இரண்டு டேனிசு பீரங்கிகள் வைக்கப்பட்டுள்ளன. பொறையாறில் இருந்து சேகரிக்கப்பட்ட டேனிசு கால பீரங்கி ஒன்று அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது. 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரிட்டிஷ் ஆட்சிக் கால பீரங்கி ஒன்றும், திருமுல்லைவாசல் துறைமுக அலுவலகத்தில் இருந்து சேகரித்துக்கொண்டு வரப்பட்டு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இப்பீரங்கியில் சுடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரும்பு குண்டுகள் பல்வேறு பருமன்களில் கிடைத்துள்ளன. இவற்றுள் 3 குண்டுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## கத்திகள்

பல்வேறு அமைப்புள்ள கைப்பிடி கொண்ட போர் வாள்கள், பிண்டி பாலம் எனப்படும் ஈட்டிகள் மேலும் பல்வகை ஈட்டிகள், சமதாடு, சூலம், வெட்டருவாள், வீச்சருவாள், பைனட் சுலுக்கி, யானை மீது சண்டை செய்யும் கத்திகள், இரும்பு அம்புகள், கட்டாரி, துரடு முதலியவை அருங்காட்சியகத்தில் இடம் பெறுவதைக் காணலாம்.

## கண்ணாடிப் பொருட்கள்

டேனிஷ் காலத்தில் வழக்கிலிருந்த கண்ணாடி போத்தல்கள், வேலைப்பாடமைந்த கண்ணாடி டம்ளர்கள், கண்ணாடி மூடி கண்ணாடி குடுவைகள், கண்ணாடியால் ஆன விளக்கு, மது அருந்தும் சிறிய கண்ணாடி டம்ளர் முதலியன காட்சியில் இடம் பெறுவதைக் காணலாம்.

## பீங்கான் கலைப் பொருட்கள்

டேனிஷ் ஆட்சிக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட பீங்கான் கலைப்பொருட்களில் ஊதா வண்ணப் பூங்கொத்துகளுடன் பலவித ஓவியங்களும் இடம் பெறுவதைக் காணலாம். இவ்வகை பீங்கான் பொருட்களைச் சீனா போன்ற நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்திருக்கிறார்கள். சமீபத்தில் கிடைத்த ஒரு கரண்டியின் கைப்பிடியில் சீன எழுத்துக்கள் உள்ளன. தரங்கம்பாடியில் இருந்து சேகரிக்கப்பட்ட பீங்கான் கலைப் பொருட்களில் குறிப்பிடத்தக்கவை சிலவற்றைக் கீழே காணலாம்.

1. பழுப்பு நிற பீங்கான் கெண்டி
2. வெள்ளை நிற பீங்கான் கெண்டி
3. மைபுட்டி வைக்கும் தாங்கி
4. டேனிஷ் தம்பதியர் நிற்கும் சிற்பம்
5. பச்சை நிற பீங்கான் தட்டுகள்

6. குமிழ் உடை மேல்மூடி
7. பூட்பாலீஷ் திரவம் வைக்கும் ஜாடி
8. மது ஜாடி மற்றும் பல்வேறு ஓவியங்களைக் கொண்ட பீங்கான் ஓடுகளையும் வைப்பகத்தில் காணலாம்.

## கடல்வாழ் உயிரினங்கள்

தரங்கம்பாடியில் இருந்து சேகரிக்கப்பட்ட பலவகை கடல்வாழ் உயிரினங்களின் எலும்புகள், ஓடுகள், சிப்பிகள் முதலியவற்றையும் இங்கே காணலாம்.

1. வேளாமீன் கொம்பு
2. கல்லான கிளிஞ்சல் (பாசில்)
3. பலவகைச் சங்குகள்
4. திமிங்கலத்தின் எலும்புக்கூடு

## கல்லான கிளிஞ்சல்

ஆசியாவில் கிடைத்த கல்லான கிளிஞ்சல்களில் இதுவே மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. டிரிடாக்ரா என்று அழைக்கப்பட்ட இக்கிளிஞ்சல் (Glaint Clan) என்றும் அழைப்பர். 2½ கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

## நவாப் கால சின்னம்

பித்தளையிலான இக்கிண்ணத்தில் சித்தி (காலிகிராபி) எழுத்து முறையில் அரபியில் "786 நவாப் வாலாஜா அவ்வல்" என பொறிக்கப் பட்டுள்ளது. பாத்திரத்தைச் சுற்றிலும் 8 யானைகளின் அணிவகுப்பும், பூ வேலைப்பாடும் அழகாக செதுக்கப்பட்டுள்ளது. கி.பி. 1742 முதல் 1800 வரை ஆற்காட்டை ஆட்சி செய்த முதலாம் நவாப்பின் காலத்தது இக்கிண்ணம். காசு சேகரிக்கவோ அல்லது தூபப் பொருட்கள் போட்டு வைக்கவோ இக்கிண்ணம் பயன்பட்டிருக்கலாம். இதுவும் அகழ்வைப்பகத்தில் அணி செய்வதைக் காண்கிறோம்.

## கோ.கோ.டி.மர் (கப்பல் தேங்காய்)

கடல் வணிகர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த தேங்காய் ஓட்டுப்பாத்திரம் மொரிசியஸ் தீவுப் பகுதியில் இவ்வகை தேங்காய்கள் விளைகின்றன. இந்த ஓட்டை இரண்டாகப் பகிர்ந்து பிச்சை பாத்திரமாகவும் பயன்படுத்தியுள்ளனர். மேற்புறம் இரண்டு திறப்புகளைக் கொண்டது. எருக்கட்டாஞ்சேரி, சாவடி பகுதிகளில் வணிகர் குடும்பங்களில் இவ்வகைப் பாத்திரங்களைக் காணலாம்.

## பழைய டேனிஷ் கொடி

ஒரு தடியில் கோர்த்து நூல்களால் இரு முனையையும் இணைத்து நடுவில் ஒரு வளையம் மாட்டியுள்ளனர். இந்தக் கொடியின் மேல்புறம், கான் சன் & கம்பெனி ஆர்கஸ் என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. 48 செ.மீ. உயரமும், 107 செ.மீ. அகலமும் கொண்ட இக்கொடியின் இரு முனைப்பகுதிகள் மிகவும் சிதைந்துள்ளன.

## கிராம காவலரின் தோள் பட்டை

66 செ.மீட்டர் நீளமுள்ள கிராம காவலர்கள் பயன்படுத்திய 'லத்தி' என வழங்கப்பட்ட கைத்தடி ஒன்று வைப்பகத்தில் உள்ளது. டவாலி எனப்படும் தோள் பட்டையின் நடுவில் பித்தளையால் செய்யப்பட்ட முத்திரை உள்ளது. இதில் VILLAGE POLICE PEON - TRANQUEBAR என எழுதப்பட்டுள்ளது. ஊதா மற்றும் சிகப்பு கம்பளியைக் கொண்டு செய்யப்பட்ட இந்த பட்டையின் மொத்த நீளம் 1.89 மீட்டர் ஆகும். திரு இராமானுஜ நாயக்கன் பாளையம், சின்னப்பிள்ளை என்பவரது வீட்டில் இருந்து பெறப்பட்டது. இவரது மூதாதையர்கள் டேனிஷ் ஆட்சிக் காலத்தில் தரங்கம்பாடிக்கு கிராம காவலர்களாகப் பணியாற்றியதால் இவ்வீட்டை இன்றும் "சேவகர் வீடு" என்று அழைக்கிறார்கள்.

## கப்பலின் உதிரி பாகங்கள்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டேனிஷ் கப்பலின் உதிரி பாகங்கள் எருக்கட்டாஞ்சேரியில் இருந்து சேகரிக்கப்பட்டன. 1) பல் சக்கரம் 2) நீண்ட பட்டையான இரும்பு 3) வட்டமான

சக்கரம் (15 எனக் குறிக்கப்பட்டது) 4) ரோமன் எண்ணிடப்பட்ட வட்டமான சக்கரம் முதலியன. இவற்றுள் இரண்டு சக்கரங்கள் எருக்கட்டாஞ்சேரியில் வசிக்கும் வெங்கடாசல செட்டியார் என்பவரின் வீட்டுக்கு பின்புறம் உள்ள கிணற்றுச் சுவரில் வைத்துக் கட்டப்பட்டிருந்தன. இவற்றை அனுமதி பெற்று சுவரை அகற்றி உள்ளே இருந்த சக்கரங்கள் பெற்று வரப்பட்டன. தற்போது பொது மக்களின் பார்வைக்காக வைப்பகத்தில் உள்ளன.

## விளக்குக் கம்பம்

இரும்பினால் ஆன இந்த விளக்குக் கம்பம், 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. '7' என்ற எண் வடிவத்தில் உள்ளது. பொறையாரில் இருந்து சேகரிக்கப்பட்டது. 95 செ.மீட்டர் உயரமுடைய இக்கம்பத்தை ஊரார் கப்பரை விளக்கு (Bowl Shaped Lamp) என்று கூறுகிறார்கள். பொறையாறு பொய்யாத விநாயகர் கோயில் தெரு முனையில் நடப்பட்டிருந்தது. தற்போது பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விளக்கின் பீடம் வட்டமாக இருந்தது. இதன் சுற்றளவு 104 செ.மீ கொண்டது. 20 துளைகளையும் கொண்டு விளங்குகிறது. நிற்கும் தூண் பகுதியில் 9 துளைகள் காணப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டின் டேனிஷ் கால விளக்குக் கம்பத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## இரும்பாலான பொருட்கள்

இரும்பாலான காட்சிப் பொருட்களுள் குறிப்பிடத்தக்கது இரும்பு குண்டுகள். இவை 100 கிராம், அரைக்கிலோ, ஒரு கிலோ எடை கொண்டவை ஆகும். பீரங்கியில் வைத்து எதிரியைத் தாக்குவதற்கு இவை பயன்பட்டுள்ளன.

ஒரு சேர் (300 கிராம் எடை) எனும் எடை உடைய சதுர எடைக்கல் ஒன்றும் உள்ளது. நாயக்கர்கால பூட்டு ஒன்றும் காட்சிக்கு உள்ளது. உருண்டையாக ¾ அடியில் உள்ளே நடுவில் ஸ்பிரிங் கொடுத்து, மேலே வளைவுக் கம்பியுடன் உள்ளது. நாயக்கர் காலத்தில் அரண்மனை, கோட்டை, கோயில் போன்றவற்றின் பெரிய வாயிலில் உள்ள பெரிய மரக்கதவுகளில் இப்பூட்டு பயன்பட்டுள்ளது.

## கப்பல் நங்கூரம்

தரங்கம்பாடியை அடுத்துள்ள மண்டபத்தூர் என்ற கிராமத்து மீனவர்களால் கடலில் இருந்து சேகரிக்கப்பட்டது. கடல் நீரில் பல ஆண்டுகள் மூழ்கி இருந்ததால் மேற்பகுதி உப்பு படிவம் ஏறி கல்லாக மாறியுள்ளது. 250 டன் எடைக்கும் மேல் உள்ள கப்பலை நிறுத்தி நங்கூரம் பாச்சுவதற்கே இவ்வகை இரும்பு நங்கூரங்கள் பயன்படுத்தப் பட்டன. இதன் இரு முனைகளிலும் உள்ள அலகுகளும் நடுவில் உள்ள கொக்கியும் தற்போது இல்லை. இந்த நங்கூரம் டேனிஷ் கப்பலில் பயன்படுத்தப்பட்டதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## முதுமக்கள் தாழி

இறந்தவர்களைத் தாழிகளில் குவித்தல் தொன்றுதொட்டு தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த பழக்கமாகும். தரங்கம்பாடி வட்டத்தில் பல ஊர்களில் இதுபோன்ற முதுமக்கள் தாழிகள் கிடைக்கின்றன. டேனிஷ் ஆட்சிக்குட்பட்டிருந்த தில்லையாடி பகுதியில் நாகப்பா நகரில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் நமக்குக் கிடைக்கின்றன. அருங்காட்சியகத்தில் இடம்பெறும் தாழி கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். தில்லையாடி பகுதியில் இருந்து சேகரிக்கப்பட்டது. வாய்ப் பகுதி 98 செ.மீ சுற்றளவு கொண்டது. இதன் உடல் பகுதி 1.98 மீட்டர் ஆகும். மேலும் இவ்வூரில் முதுமக்கள் தாழியில் இருந்து சேகரிக்கப்பட்ட கத்தி, இரும்புத் தடி போன்ற ஆயுதங்களையும் அகழ்வைப்பகத்தில் காணலாம்.

## மற்றும் பிற பொருட்கள்

மேலே குறிக்கப்பட்ட பழம்பொருட்களே அன்றி டேனிஷ் ஆட்சிக்காலத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளத் தகவல் பலகைகள் ஆங்காங்கே எழுதி வைக்கப்பட்டுள்ளன. இடுப்பில் மாட்டும் கடிகாரம், 1879 என ஆண்டு பொறித்த மர ஆழாக்கு, 885 என்ற எண்ணும் 289 என்ற எண்ணும் பொறித்த மரத்தால் ஆன வீசம் படியும், 18-ஆம் நூற்றாண்டின் சமுதாய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் பல்வகைப் புகைப்படங்கள் முதலியன இவ்வைப்பகத்தில் இடம்பெறுவதைக் காணலாம். 100 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்ட

ஆங்கிலேயப் போர்க் கப்பலின் மாதிரி வடிவம் ஒன்றும் விலைக்கு வாங்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

ஒரே மரப்பலகையால் ஆன வட்ட வடிவ தட்டுகள் இரண்டு காட்சிக்குள்ளன. இவை இரண்டு அடி விட்டம் உடையவையாகும். டேனிஷ் காலத்தில் பொது நிகழ்ச்சிகளில் வெற்றிலை பாக்கு, பழம், தேங்காய் எடுத்துச் செல்லப் பயன்பட்டதாகும்.

இரண்டு மது ஜாடிகள் கிடைத்துள்ளன. ஒன்று 60 லிட்டரும், சிறியது 40 லிட்டரும் கொள்ளளவு உடையவை. வேலைப்பாட்டுடன் கெட்டியாகவும் உறுதியாகவும் செய்யப்பட்டவையாகும்.

மேலும் மாக்கல்லால் செய்யப்பட்ட 3 லிட்டர் கொள்ளளவு உள்ள சட்டி ஒன்றும் திரு. கோ. முத்துசாமி, காப்பாட்சியரால் சேகரிக்கப்பட்டுள்ளது. இந்த டேனிஷ் கால பொருட்களை அகழ்வைப்பகத்திற்கு பொறையாரைச் சேர்ந்த திரு. தி. கோவிந்தராஜ் அவர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

பல தடயங்கள் கடலில் அழிந்து விட்டதை நம்மால் அறியமுடிகிறது. தரங்கம்பாடியின் அழிந்த கோட்டைக் கொத்தளச் சுவர்களை இன்றும் காணமுடிகிறது.

## பொன்னோலை ஒப்பந்தமும் டேனிஷ் மற்றும் கிழக்கிந்தியக் கம்பெனியார் தமிழகம் வருகையும்

கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து போர்ச்சுக்கீசியர், டச்சுக்காரர்,டென்மார்க்கினர், ஆங்கிலேயர் போன்ற பல நாட்டவர்களும் கடல் வாணிகம் செய்து நமது நாட்டுப் பெருமையை நிலைநாட்ட வெளிநாடுகளுக்குக் கிளம்பினார்கள். இதன்படி டேனிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி கி.பி. 1616-இல் டென்மார்க்கில் தொடங்கப்பட்டது.

டென்மார்க் அரசர், நான்காம் கிறிஸ்டியன் அந்நாட்டு கப்பல் படைத் தளபதி "ஓவ் கிட்டி" என்பவர் தலைமையில் இரண்டு கப்பல்களை சரக்குகளுடன் அனுப்பி வைத்தார். இவருடன் ஹாலந்து கப்பல் தலைவன் ரோலண்ட் கிரேப் என்பவரும் உதவிக்கு அனுப்பப்பட்டார். முதலில் இருவரும் இலங்கைக்குச் சென்று அங்குள்ள கண்டி என்னுமிடத்தில் சில காலம் தங்கினர்.

அப்போது தஞ்சை மண்டலத்தை ரகுநாத நாயக்கர் என்பவர் ஆட்சி செய்து வந்தார். அவர் ஓவ் கிட்டிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் டென்மார்க் அரசர் நான்காம் கிறிஸ்தியனுடன் நட்பும், வணிகத் தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார். அக்கடிதம் பனை ஓலை வடிவத்தில் பொன்தகட்டில் இருந்தது. அதில் ரகுநாத நாயக்கரின் கையெழுத்து தெலுங்கில் இடம் பெற்றுள்ளது. தஞ்சை நாயக்க மன்னரின் அனுமதியோடு தரங்கம்பாடியில் கோட்டைக் கட்டிக்கொண்டு வணிகத்தலம் அமைத்துக்கொள்ளவும் அனுமதி பெற்றனர். இங்கு தங்கிக்கொண்டு வாணிகம் செய்வதற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3111 கப்பம் தஞ்சைக்கு செலுத்த வேண்டும் என்றும் ஒப்புக்கொண்டனர். இவ்வொப்பந்தம் தமிழ் ரௌத்திரி ஆண்டு சித்திரை மாதம் 22-ஆம் தேதி (1620-இல்) கையெழுத்தாகியது. இவ்வொப்பந்தம் எழுதப்பட்ட பொன்னோலை இன்றும் கோபன் கேகனில் உள்ள ராயல் ஆவணக் காப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளதை அறியலாம். இவ்வாறு 12 மைல் நீளமும் 3 மைல் அகலமும் கொண்ட தரங்கம்பாடியும் அதன் சுற்றுப்புற கிராமங்களும் டேனிஷ்காரர்கள் ஆளுகைக்கு மாறியது. அதாவது திருவிடைக்கழி வரை டேனிஷ் ஆட்சிப்பரப்பு இருந்துள்ளது.

## பொன்னோலையின் விபரம்

1. ரௌத்ரி வருஷம் சித்திரை 20-ஆம் தேதி ஸ்ரீமது இரகுநாதனாயக்கர் டென்மார்க் ராசாவினவர்கள் வாசல் காரியப் பேற்கு எல்லா நன்மையும் பெருக அறிய வரக்காட்டின காரியம் நாமும் பரிணாமத்திலே இருக்கிறோம் ராசாவினவர்கள் பரிணாமத்துக்கும் எழுதுவித்து அனுப்பும்படி செய்யவும்
2. உலந்தீசு சென்னரலும் ரூலங்கலப்பை கற்பித்தாரும் வந்து அவடத்தில் வத்தமானங்கள் சொல்லக் கேட்டு சந்தோஷமாச்சு இராசாவினவர்கள் என்றும் நாம் என்றும் பேதம் இல்லாமல் இனஞ்சனமுற நடக்க வேணும் என்குற படியாலே சென்னரல்
3. . . . . . . . . . . . ரூலங்கலப்பைக் கற்பித்தாற்கும் பல்லக்கு இட்டு வெகுமானம் பண்ணி அந்த தேசத்தார் எல்லாரும் வந்து குடி இருக்குறதுக்கு இங்கே தரங்கம்பாடி என்று ஒரு கரதுறையும் கட்டளை இட்டு அந்த தேசத்துக்கு மிளகு அலப்பமான படியாலே மிளகு

4. கொண்டு குடுப்பிச்சு ரூலங்கலப்பை கற்பித்தாரை பறங்கியற் சிலரை பண்ணினதுக்கு அவர்களுக்குத் தக்க புத்தி சொல்லிவித்து பன்னீராயிரம் பொன் அவராதம் வாங்கி தங்கள் வகை கப்பல் வழிபோக வேண்டாம் என்று கட்டளை இட்டு

5. சென்னரலை அனுப்பி ரூலங்கலப்பை கற்பித்தாரை இங்கு தலமாக குடி இருக்கத் தக்கதாக கட்டளை இட்ட படியாலே அவர் இங்கே தலமாக இருக்கிறார் அந்த தேசம் என்றும் இந்த தேசம் என்றும்

6. பேதமற நடக்க வேணும் ஆனபடியாலே அந்த தேசத்தாரை இங்கே வந்து குடி இருக்கத் தக்கதாகவும் கட்டளை இட்டு அனுப்பி அந்த தேசத்தில் உண்டான அபூறுவமான வஸ்துக்களும் அடிக்கடி ஏற்றிவித்து அனுப்பும்படி செய்யவும் இப்போ உடுகரை

7. பெரிய பீதாம்பரம் இரண்டும் புருசர் துப்பட்டி ஒன்றும் படாங்கப் பச்சவடம் இரண்டும் எழுத்து துப்பட்டி நாலும் கட்டுவித்து சமதாடு இரண்டும் தோப்பாகத்தி ஒன்றும் சிக கடாரி ஒன்றும் சூகக் கடாரி ஒன்றும் சிங்கரம் நாலும் அனுப்பினோம் வர

8. ப்பாத்துக் கொள்ளும்படி செய்யவும் இந்தச்சேதி காரியப் பேர் தின்மார்க் ராசாவினவர்களுக்கு அறிக்கை செய்யவும் உ

ஸ்ரீ ரகுனாத் (தெலுங்குக் கையொப்பம்)

## மும்மதங்களும் சங்கமிக்கும் தரங்கம்பாடி

நாகை மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களில் வரலாற்றுச் சிறப்புடன் திகழ்வது தரங்கம்பாடி ஆகும். இது சங்ககாலம் தொட்டு ஆங்கிலேயர் காலம் வரை தொடர்ச்சியான வரலாற்றுப் பெருமை மிக்கது. இடைக்காலத்தில் இங்கு துறைமுகம் அமைந்ததால் வெளிநாடுகளுடன் வாணிபமும் சிறப்புடன் நடந்துள்ளது.

தரங்கம்பாடிக்கு 400 ஆண்டுகள் பழமை மிக்க டேனிஷ் கோட்டை பெருமை சேர்க்கிறது. இதே போல் 13-ஆம் நூற்றாண்டில் பாண்டியன் குலசேகரனால் கடற்கரையில் கட்டப்பட்ட

ஸ்ரீமாசிலாமணியீசுவரர் கோயில், ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயில், ஸ்ரீரேணுகா பரமேஸ்வரி அம்மன் கோயில் போன்றன தமிழர்களின் வழிபாட்டிலும், நான்கு கிருத்துவ தேவாலயங்கள் உள்ளதால் கிருத்துவர்களும், இரண்டு தர்கா பள்ளிவாசல்கள் உள்ளதால் இசுலாமியர்களும் வேற்றுமையின்றி இவ்வூரில் சகோதர மனப்பான்மையுடன் வசித்து வருகின்றனர். எனவே சமய வளர்ச்சியிலும் மும்மதங்களின் இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருவது சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

# தரங்கம்பாடியில் தொல்லியல் துறை அகழாய்வு

நாகை மாவட்டம் தரங்கம்பாடியில் இரண்டு முறை தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அகழாய்வு மேற்கொண்டு பல அரிய தொல்லியல் தடயங்களை வரலாற்றுக்கு உதவும் வகையில் வெளிக்கொண்டு வந்துள்ளது.

## 1. டேனிஷ் கோட்டைக்கு உள்ளே நடந்தது

2001-ஆம் ஆண்டில் ஆணையர் முனைவர். இரா. கண்ணன் அவர்களின் உத்தரவுப்படி தரங்கை டேனிஷ் கோட்டையின் உள்ளேயும் 2002-இல் நடுமைதானத்திலும் அதன் உட்புறம் உள்ள வடக்கு மதில் சுவர் இடிந்து விழுந்த இடத்திலும் இத்துறை தொல்லியல் அலுவலர் திரு தி. சுப்பிரமணியன் அகழாய்வு செய்துள்ளார்.

கோட்டையின் உட்புறம் நுழைவு வாயிலுக்கு மேற்கே சுமார் 50 அடி நீளத்திற்கு மதில் சுவர் மழையினால் இடிந்து கீழே விழுந்து விட்டது. இடிந்து விழுந்த சுவரை அகற்றிவிட்டு தூய்மை செய்து அதன் அடிப்பகுதி (அஸ்திவாரம்) வரை தோண்டி ஆய்வுப் பணி 2001-இல் செய்யப்பட்டது. அப்போது மதிற்சுவரின் அடிப்பகுதி 6 அடி ஆழம் வரை சென்றிருப்பது செங்கற் சுவர்களின் இருபக்கம் உள்ள சுவர்களின் நீள அகலமும் தெரியவந்தன. அதன்பிறகு இடிந்த பகுதி மீண்டும் கட்டி முடிக்கப்பட்டது.

டேனிஷ் கோட்டை கி.பி. 1620-இல் கட்டப்பட்டது. கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் ஆகிவிட்டது. அவர்கள் காலத்திய கட்டட அமைப்பு முறை, கலாச்சாரம், பண்பாடு இவைகளையும் பற்றி தெரிந்து கொள்வதற்காகவே கோட்டைக்குள் முதல் கட்ட அகழாய்வு தொடங்கப்பட்டது. கோட்டை உள்ளே மூன்று இடங்களில் மாதிரி குழிகள் போடப்பட்டன. ஒவ்வொரு குழியிலும் எட்டு வகையான மண் அடுக்குகள் இருப்பது கண்டறியப்பட்டன. ஒவ்வொரு அடுக்கும்

40 முதல் 50 செ.மீ உயரம் உடையவை. இவைகளில் உப்பு மணல், சன்ன மணல், தவிட்டு மண், களிமண், இயற்கை மண் என்பவை தொடர்ந்து வந்தன. ஒவ்வொரு குழியும் 3 மீட்டர் ஆழம் வரை தோண்டிய பின் இயற்கை மண் கிடைத்துள்ளது.

கோட்டையின் நுழைவு வாயிலில் மேற்கே இடிந்து விழுந்த மதில் சுவர் பகுதியில் செங்கற்களை அகற்றி மாதிரி குழி போடப்பட்டுள்ளது. இப்பகுதியிலும் 30 செ.மீ கனத்திற்கு மஞ்சள் நிற மண்ணும், செங்கற்களுடன் கலந்த களிமண்ணும் கடல் பகுதியின் சன்ன மணலும் மண் அடுக்குகளில் காணப்பட்டன. தரை மட்டத்தில் செங்கற்கள் வரிசையாக பாவப்பட்டிருந்தன. இதனால் மழைநீர் தேங்கி மதில் சுவரைப் பாதிக்காமல் வெளியேற்றப்பட்டது தெரியவருகிறது. இவ்வாறு இரண்டு வரிசை செங்கல் அடுக்குகள் கோட்டை உள்மைதானத்தில் பாவப்பட்டிருந்தது தெரியவருகிறது. கோட்டைச் சுவருக்கு பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் தரமான களிமண்ணால் உருவாக்கப்பட்டவை. அதன் அளவு 20x13x4 செ.மீ.

இப்பகுதியில் டேனிஷ்கால சுடுமண் பானை ஓடுகள் சிவப்பு நிறத்திலும், கருப்பு-சிவப்பு நிறத்திலும் அதிகம் கிடைத்துள்ளன. சீன தேசத்து பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. உடைந்த மது கிண்ணத்தின் ஒரு பகுதியில் சீன தேசத்து அழகிய மங்கையின் உருவம் காணப்படுகிறது. இந்த ஓடு வெள்ளை நிறத்திலும் மங்கையின் உருவம் நீல நிறத்திலும் காணப்படுகிறது.

கோட்டைக்கு உள்ளே நடு மைதானத்தில் மூன்று இடங்களில் 3 அடி சதுர அளவுக்கு மாதிரிக் குழிகள் போடப்பட்டன. அப்போது நடு மைதானம் இரண்டு அடி மண்ணால் முழுவதும் ஆங்கிலேயர் காலத்தில் மூடப்பட்டுவிட்டது என்பது அறியமுடிந்தது. இரண்டு அடிக்கு கீழே கோட்டையின் உள்ளே நடு மைதானம் முழுவதும் செங்கற்களைக் கொண்டு டேனிஷ் காலத்தில் தரைத்தளம் அமைக்கப் பட்டிருந்ததும் தெரியவந்துள்ளது. இதேபோல் தரைத்தளம் மண்மூடிக் கிடந்த மூன்று பெரிய கிடங்கு அறைகளும் ஆய்வு செய்யப்பட்டன. அங்கும் செங்கல்லாலான தரைத்தளத்தை மண் 2 அடி உயரத்திற்கு மூடியிருப்பதும் தெரியவந்தது.

இங்கு கோட்டையின் மேல் தளத்தை (முதல் தளத்தை) தாங்கி நிற்கும் 16 அடி சுற்றளவுள்ள அகன்ற தூண்களின் அடிப்பகுதியும் கண்டறியப்பட்டது. மேலும், கோட்டை புணரமைப்புப் பணிகள் 2004-இல் நடந்தபோது கோட்டையின் உள் மைதானம் ஒழுங்கற்ற நிலையில் மேடுபள்ளமாக முட்செடிகளுடன் இருந்ததை புல்டோசர் மிஷின் கொண்டு தூய்மை செய்து சமம் செய்யும் பணியும் நடந்தது. அப்போது வடகிழக்கு பக்கம் ஒரு சுதை வேலைப்பாடு மிக்க தூணின் மேல்பகுதி கிடைத்தது. தாமரை மலரின் மொக்கு விரிந்ததைப் போல் அழகாக சுதையில் தூணின் மேல்பகுதியைச் செய்திருந்தனர். இது கோட்டை முகப்பில் முன்பு இருந்த தூணின் மேல்பகுதி என்பதும் கண்டறியப்பட்டன.

மேலும் இந்த அகழாய்வில் பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், மது ஜாடியின் உடைந்த பகுதிகள், சுடுமட்பொருட்களின் உடைந்த பகுதிகளும் இங்கு கிடைத்துள்ளன. இவை நாயக்கர். மராட்டியர், டேனிஷ், பிரிட்டிஷ்காலப் பொருட்களாகும்.

## 2. கோட்டைக்கு வெளியே இருந்த அகழிப்பகுதியில் நடைபெற்றது

தற்போதுள்ள டேனிஷ் கோட்டையைச் சுற்றிலும் நான்கு பக்கமும் 80 அடி அகலத்தில் 20 அடி ஆழமுடன் நீண்ட வடிவமைப்பில் பாதுகாப்புக்காக அகழியும் டேனிஷ் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் 15 அடி ஆழத்திற்கு தண்ணீர் நிரப்பியிருந்தனர் அதில் பாம்புகள், முதலைகள் முதலியனவும் விடப்பட்டிருந்தன. கோட்டை நுழைவு வாயிலின் முன்பாக மூன்று செங்கல் மேடைகளுடன் வாயில் பகுதியில் நடைபாதையுடன் மரப்பலகைகளைக் கொண்டு ஏற்றி இறக்கும் நடைப்பாலமும் அமைத்து இருந்தனர் என்பதும் தெரிய வந்துள்ளது.

இந்த அமைப்புடன் கூடிய வரைபடத்தை டென்மார்க் ஆவணக் காப்பகத்திலிருந்து பேராசிரியர் திரு. நீல்ஸ் என்பவர் கண்டுபிடித்து தற்போது புதைந்து போயிருந்த அகழிப்பகுதியை அகழாய்வு செய்து வெளிக்கொண்டு வரும் பணியில் ஈடுபட்டார். இதற்கு மத்திய அரசு தொல்லியல்துறை, தமிழக அரசு தொல்லியல் துறைகளிடம் அனுமதி பெற்றார்.

டென்மார்க் பல்கலைக்கழகத்தின் நிதி உதவியுடன் கோட்டை நுழைவுவாயிலின் எதிரில் உள்ள மைதானத்தில் இரண்டாம் கட்ட அகழாய்வு தேதி 4-2-2008 முதல் 23-2-2008 வரை தொடர்ந்து நடைபெற்றது.

இந்த அகழாய்வில்

1. டென்மார்க் பேராசிரியர் திரு. நீல்ஸ்,
2. மத்திய அரசு தொல்லியல் துறையின் தென்மண்டல கண்காணிப்பாளர் திருமதி. சத்தியபாமா,
3. தமிழக தொல்லியல் துறை அகழாய்வு பிரிவு தலைவர் திருமதி. சீ. வசந்தி
4. தரங்கை கோட்டை காப்பாட்சியர் திரு. கோ. முத்துசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

5. தமிழக தொல்லியல் துறை, தர்மபுரி தொல்லியல் அலுவலர் திரு. தி. சுப்பிரமணியன் முழுப்பொறுப்பேற்று இரண்டு வாரங்களில் அகழாய்வுப்பணிகள் முடித்தார். இதனால் கோட்டையைச் சுற்றிலும் நான்கு பக்கமும் ஆழமான அகழி இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் அகழியின் வெளிப்பக்கம் பெரிய மதில் சுவர் இருந்ததும் தெரியவந்துள்ளது. அகழியைக் கடப்பதற்கு மூன்று செங்கல் மேடைகளும், நுழைவுவாயிலை ஒட்டி செங்கல்லால் ஆன நடைபாதையும் அகழியில் உள்ள கல்மேடைகளை இணைப்பதற்கு மூடி திறக்கும் வகையில் மரப்பாலமும் இருந்தமை அகழாய்வில் கண்டறியப்பட்டது.

## அகழாய்வில் கிடைத்த அரிய தொல்பொருட்கள்

டென்மார்க் நாட்டினர் இங்கு கோட்டையைக் கட்டி அதனுள் மற்றவர்கள் எளிதில் நுழையமுடியாதபடி இக்கோட்டையைச் சுற்றி மதிலும், அகழியும் அமைத்திருந்தனர் என்பது தெரிகிறது. இவர்களுக்கும் பின்னால் வந்த ஆங்கிலேயர்கள் அகழியை மூடிவிட்டதாக தெரியவருகிறது. அப்போது தரங்கம்பாடியைச் சுற்றிலும் இருந்த இடிந்த வீடுகளில் உள்ள சுவர்கள் மற்றும் புஞ்சைத் திடலிலிருந்து கொண்டுவரப்பட்ட மண், வீட்டு மனைப் பகுதியிலிருந்து

தோண்டி எடுத்துவரப்பட்ட மண் ஆகியவைகளைக் கொட்டி பெருமளவில் தூர்த்துள்ளனர். இதனால் அகழிப்பகுதியில் தோண்டியபோது 6 அடி ஆழம் வரை இயற்கையாக இல்லாமல் ஒழுங்கற்ற நிலையில் மண் அடுக்குகள் காணப்பட்டன.

## கடற்கன்னி சுதைச்சிற்பம்

அகழாய்வில் கிடைத்தப் பொருள்களில் முக்கியமானது கடற்கன்னியின் சுதைச் சிற்பமாகும். டென்மார்க் நாட்டினரின் அரசு சின்னங்களுள் கடற்கன்னி சிற்பமும் ஒன்றாகும். கோட்டையின் நுழைவுவாயிலில் மேற்பகுதியில் இருபுறமும் வணங்கிய நிலையில் வரவேற்பது போல் இரண்டு கடற்கன்னி சிற்பங்கள் அமைத்திருந்தனர். இச்சிற்பங்கள் சுதையினால் செய்யப்பட்டவை ஆகும். இடுப்பிற்கு மேல் பெண்ணின் உருவமும், இடுப்பிற்குக் கீழ் பெரிய மீனின் வால் பகுதியும் உடையதாக இந்த கடற்கன்னியின் சிற்பம் உள்ளது. பிற்காலத்தில் கோட்டையின் நுழைவுவாயிலை வடகிழக்கு மூலையிலிருந்து தற்போது உள்ள மைய இடத்திற்கு மாற்றி அமைத்தார்கள். அப்போது இந்த கடற்கன்னி சுதைச் சிற்பமும் அகற்றப்பட்டு அகழிக்குள் போட்டு மூடப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. அகழாய்வின் மூலம் மீண்டும் கிடைத்த இந்த டேனிஷ் கலையில் அமைந்த கடற்கன்னி சுதைச்சிற்பம் தூய்மை செய்து அகழ்வைப்பகத்தில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. தலைப் பகுதியும், அடியில் உள்ள வால் பகுதியும் உடைந்து விட்டாலும் இது ஒரு டேனிஷ் கலையின் வெளிப்பாடு என்பதை உணர்த்தி நிற்கிறது.

இந்த அகழாய்வில் அதிக அளவில் சுடுமண்பானை ஓடுகளும், வீட்டின் கூரையில் வைக்கப்படும் ஓடுகளின் உடைந்த பகுதிகளும், உடைந்த செங்கல் துண்டுகளும் அதிக அளவில் கிடைத்துள்ளன. சுடுமண் பானை ஓடுகள் சங்ககாலம் முதல் டேனிஷ்காலம் வரை தொடர்ந்து பல்வகை வடிவங்களில் கிடைக்கின்றன. குறிப்பாக சுடுமட்கலன்களில் கழுத்துப் பகுதி மேல் உள்ள விளிம்புப் பகுதி மது ஜாடிகளின் கெட்டியான அடிப்பகுதி போன்றவை கிடைத்துள்ளன. இவை கருப்பு வண்ணத்திலும், கருப்பு-சிவப்பு வண்ணத்திலும் உள்ளன.

இந்த அகழாய்வில் பீங்கான் பொருட்களும் அதிகம் கிடைத்துள்ளன. இவை தேனீர் கோப்பை, மது ஜாடி, வட்ட வடிவத் தட்டுகள் போன்றவற்றின் உடைந்த பகுதிகளாகும். மேலும் பீங்கான் பொருட்களால் ஆன புகைக்கும் கருவிகள் அதிகம் கிடைத்துள்ளன. இவை பெரும்பாலும் இரண்டாக உடைந்தே கிடைக்கின்றன. புகையிலை வைக்கும் முகப்பு பகுதியும், வாயில் வைத்து புகைக்கும் குழாய் பகுதியும் நூற்றுக்கு மேல் கிடைத்துள்ளன. இப்பீங்கான் பொருட்கள் பெரும்பாலும் டென்மார்க், சீனா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

## கண்ணாடிப் பொருள்கள்

அகழாய்வில் குறிப்பிடத்தக்க அளவு கண்ணாடியால் ஆன பொருட்களின் உடைந்த பகுதிகளும் கிடைத்துள்ளன. அக்காலத்தில் தேனீர் அருந்துவது, மது அருந்துவது போன்றவற்றிற்கு பல வடிவங்களில் வடிவமைத்து கண்ணாடியால் கோப்பைகள் செய்துள்ளனர். கண்ணாடியால் ஜாடிகளும், குடுவைகளும் உபயோகித்துள்ளனர். ஒரு லிட்டர் கொள்ளளவு உள்ள மதுபாட்டில்கள் அடிப்பகுதி உட்குழியுடனும், வாய்ப்பகுதி கெட்டியாகவும், வரம்பும் உள்ளன. அதன் உடைந்த பகுதிகள் அதிகம் கிடைக்கின்றன. மேலும் அகழாய்வுக் குழியிலிருந்து பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்பட்ட 1 கிலோ எடையுள்ள இரும்பு குண்டுகள் இரண்டும், ½ அடி நீளமுள்ள இரும்பு ஆணிகளும், கற்குண்டுகளும் கிடைத்துள்ளன. இவ்வாறு கிடைத்த அரிய பொருட்கள் டேனிஷ் மற்றும் பிரிட்டிஷ்காரர்கள் தமிழ்நாட்டோடு சேர்ந்து செய்த வாணிபம் மற்றும் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளன. டென்மார்க் பேராசிரியர் திரு. நீல்ஸ் அவர்களின் முயற்சியால் டேனிஷ் கோட்டையைச் சுற்றி பெரிய அகழி இருந்ததும், பின்னாளில் அது மூடப்பட்டதும் தெரியவந்துள்ளது. இந்த அகழாய்வில் கிடைத்த பொருட்கள் காட்சிக்காக அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

# தரங்கம்பாடியைச் சுற்றியுள்ள திருத்தலங்களின் வரலாறு

தரங்கம்பாடிக்குக் கிழக்கே வங்கக்கடலும், தெற்கே சந்திரபாடி எனும் ஊரும் அடுத்து 10 கி.மீ தூரத்தில் காரைக்கால், திருநள்ளார் போன்ற திருத்தலங்களும் அமைந்துள்ளன. வடக்கே திருக்கடையூர், அனந்தமங்கலம், தில்லையாடி, திருவிடைக்கழி போன்ற திருத்தலங்களும் மேற்கே மாணிக்கப்பங்கு போன்ற வரலாற்று ஊர்களும் அமைந்துள்ளன. சுற்றியுள்ள இவ்வூர்களின் வரலாற்றை இங்கே சுருங்கக் காண்போம்.

## 1. சந்திரபாடி

இவ்வூர் தரங்கம்பாடிக்கு தெற்கே மூன்று கி.மீ. தொலைவில் கடற்கரையை ஒட்டியே அமைந்துள்ளது. இங்கு வேளிர் தலைவனும், மீனவர் தலைவனும் வாழ்ந்துள்ளனர். பிறை வடிவில் அரண்மனை கட்டியிருந்துள்ளனர். கடற்படையில் பாதுகாப்புக்கு பயிற்சி பெற்ற படையும் இருந்துள்ளது. எனவே தான் சந்திரபாடி என்ற பெயர் ஊருக்கு நின்று நிலவுகிறது.

## 2. காரைக்கால்

இவ்வூர் தரங்கம்பாடிக்கு 10 கி.மீ. தெற்கில் அமைந்துள்ள தொன்மையான பேரூர். இது பிரெஞ்சு யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்தது. 63 நாயன்மார்களில் மூத்தவரும் , சிவபெருமானால் "அம்மையே" என்று அழைக்கப்பட்ட பெருமைக்குரிய காரைக்கால் அம்மையாரின் திருக்கோயில் அமைந்த ஊர் இது. மாங்கனித் திருவிழா இங்கு சிறப்பாக நடைபெறும் பெருவிழா ஆகும். இவ்விழாவைக் காண வெளிநாட்டவரும் பெருமளவில் இவ்வூருக்கு வந்து செல்கின்றனர்.

## 3. திருநள்ளார்

இவ்வூர் காரைக்காலுக்கு மேற்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. நளச்சக்கரவர்த்திக்கு பீடித்த சனியின் உக்ரம் நீங்கி, நோய் நீங்கி புதுப்பொலிவு பெற்ற இடம். நவக்கிரக தலங்களுள் சனீஸ்வரனுக்கு உரியது. இங்குள்ள ஸ்ரீதர்பாரண்யேசுவரர்

திருக்கோயிலுள் சனீஸ்வரன் காக்கை வாகனத்துடன் தனி சன்னதியில் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். நளதீர்த்தம் எனும் பெரிய திருக்குளமும் உள்ளது. தருப்பைக் காடுகள் நிறைந்த வழித் தடத்தில் இப்பேரூர் அமைந்ததால் திரு எனும் அடைமொழி சேர்ந்து திருநள்ளார் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் மரகத லிங்க வழிபாடும் தினமும் ஒரு வேளை நடைபெறுகிறது. சோழர் காலக் கல்வெட்டுகள் 25 இக்கோயிலில் உள்ளன.

## 4. திருக்கடையூர்

இவ்வூர் புராண காலப் பெருமை உடையது.

1. தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து இறவாமைக்குரிய அமிர்தம் எடுத்ததால் திருக்கடையூர் என்று பெயர் வந்தது என்பர்.

2. இவ்வூரில் தான் மிருகண்டு என்ற முனிவரின் தவத்தின் பயனாக பதினாறு வயது வரை வாழும் புத்தி கூர்மையான மார்க்கண்டேயன் என்ற மகன் பிறந்தான். எமன் 16 வயது முடிந்ததும் அவனைப் பிடிக்க வந்த போது சிவலிங்கத்தைக் கட்டித் தழுவிக் கொண்டான். அதையும் மீறி பிடிக்க வந்த எமனைக் காலால் உதைத்து எறிந்தார். எனவே, ஊருக்குத் திருக்கடவூர் என்றும் எமனுக்கே மீண்டும் உயிர் பிச்சை தந்ததால் இறைவனுக்கு ஸ்ரீகாலகாலதேவர் என்றும் பெயர் உள்ளது. இக்கோயில் கல்வெட்டுகளிலும் இவ்வாறே பெயர்கள் உள்ளன.

இத்திருத்தலத்து இறைவியின் திருநாமம் அபிராமி அம்மை. இவர் தனது பக்தன் அபிராம பட்டருக்காக அமாவாசை தினத்தன்று தஞ்சையின் மராட்டிய மன்னன் சரபோஜிக்கு பௌர்ணமியைக் (முழு நிலவாக) காட்டினார். அப்போது பட்டர் பாடிய அபிராமி அந்தாதி இன்றும் உலகம் முழுவதும் உள்ள அம்மன் சன்னதிகளில் ஒலித்துக் கொண்டுள்ளன என்பதை நாம் அறிவோம். அட்ட வீரட்டத் தலங்களுள் இதுவும் ஒன்று. அறுபது வயதிற்கு மேலும் வாழ்நாட்கள் வளர வேண்டி, தம்பதிகள் இக்கோயிலுக்கு வழிபட வருகின்றனர். வருடத்தில் 365 நாட்களும் திருமணம் நடக்கும் திருத்தலம் உலகில் இக்கோயில்தான் என்ற பெருமையும் உள்ளது. எண்பது வயதைக் கடந்த பல தம்பதியினர் இக்கோயிலுக்கு வந்து சதாபிஷேகமும், மணிவிழாவும் செய்து கொண்டு செல்வதும் வழக்கமாக உள்ளது.

## 5. அனந்தமங்கலம்

தரங்கம்பாடிக்கும், திருக்கடவூருக்கும் இடையில் இவ்வூர் அமைந்துள்ளது. அருள்மிகு ராஜகோபாலசுவாமி தனது தேவியர்களுடன் இத்தலத்தில் அருள்பாலித்து வருகிறார். இது விஜயநகரத்தார் காலக் கலையில் கட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள ஆஞ்சநேயர் திருமேனி உயர்வு மிக்கது. "திரிநேத்திர தசபுஜவீர ஆஞ்சனேயர்" என்று அழைக்கப்படுகிறார். அதாவது நெற்றிக் கண்ணோடு மூன்று கண்களும் பத்து கரங்களிலும் உரிய ஆயுதங்களுடன் நின்ற நிலையில் அரக்கர்களை வென்று வந்த களிப்புடனும் சிவபெருமான், திருமால் இவர்களின் நல்லாசியுடன் அநுமன் ஆனந்த காட்சி தரும் இடம் இது என்ற பொருளில் சிறந்த வைணவத் தலமாக இவ்வூர் விளங்குகிறது.

## 6. தில்லையாடி

பொறையாரில் இருந்து திருக்கடவூர் செல்லும் வழியில் 5 கி.மீ. தொலைவில் வடமேற்கே இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள ஸ்ரீசார்ந்தாரைக் காத்த சுவாமி கோயிலில் முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டு உள்ளது. அதில் இவ்வூர் தில்லையாளிநல்லூர் என்று குறிப்பிடப்படுகிறது. கோயிலில் கோபுரமும், சிற்பக்கலையும், கட்டடக்கலையும் சோழர்களின் செழிப்பை உணர்த்தி நிற்கின்றன.

இவ்வூரில் பிறந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த வள்ளியம்மை என்ற பெண்மணி தென்னாப்பிரிக்காவுக்கு மகாத்மா காந்தியடிகள் சென்றிருந்தபோது அங்கே சென்று சந்தித்தார். ஆங்கிலேயரின் இன வெறிக்கு எதிராகவும், சுதந்திரத்திற்காகவும் முதலில் குரல் கொடுத்தவர் ஆவார். இவரைச் சந்திப்பதற்கு தமிழகம் வந்தார் மகாத்மா காந்தியடிகள். எனவே தில்லையாடி வள்ளியம்மை நினைவாக தமிழக அரசு இவ்வூரில் அவருக்கு சிலை எடுப்பித்து மணிமண்டபமும் கட்டி நினைவுத் தூண் நிறுவியுள்ளது. எனவே வரலாற்றுச் சிறப்பும், திருக்கோயில் சிறப்பும் கொண்டது இவ்வூர். சுற்றுலா வரும் பயணிகள் பார்க்க வேண்டிய சிறந்த தலம் தில்லையாடி ஆகும்.

## 7. திருவிடைக்கழி

இவ்வூர் தில்லையாடிக்கு தெற்கே இரண்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. தற்போது அருள்மிகு பாலசுப்பிரமணியர் காட்சியளிக்கும் தனி முருகப்பெருமான் தலமாக விளங்கினாலும், பத்தாம் நூற்றாண்டில் இதுவும் ஒரு சிவன் கோயிலாகவே இருந்துள்ளது. உண்ணாழியில் ஸ்ரீபாலசுப்பிரமணியருக்குப் பின்பாக பழைய சிவலிங்கமும் இருந்து காட்சியளித்து வருகிறார். இத்தலம் அருணகிரியால் பாடல் பெற்றது. பழைய சிவன் கோயில் பழுதடைந்த நிலையில் 13-ஆம் நூற்றாண்டில் முருகப்பெருமானையும் கருவறையில் வைத்து திருத்தி அமைத்துக் கட்டியுள்ளனர். இங்கு தல விருட்சமான குரா மரத்தின் அடியில் உள்ள விநாயகர் சிற்பத்தின் பின்புறம் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

வீரசோழன் ஆற்றுக்கும், நண்டலாற்றுக்கும் இடைப்பட்ட சமவெளியில் இருப்பதால் இவ்வூர் திருவிடைக்கழி என்று வழங்கப் படுகிறது. இக்கோயிலின் முக்கியத் திருவிழாவான சூரசம்காரத்தின் போது தரங்கம்பாடி வரை திருவிழா மூர்த்திகள் அலங்காரத்துடன் பல்லக்கில் பவனி வந்து காட்சி தருவது வழக்கம். கடற்கரையில் சூரனை அழித்து தீர்த்தவாரி அளித்த பின்பு மறுநாள் திருவிடைக்கழி கோயிலுக்கு வாண வேடிக்கைகளுடன் செல்லும் தோற்றம் வருடம் தோறும் சிறப்பாக நடந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

## 8. மாணிக்கப்பங்கு

தரங்கம்பாடியின் மேற்கே மூன்று கி.மீ. தொலைவில் கடற்கரையையொட்டி அமைந்துள்ளது. இவ்வூர் சங்ககாலத்தில் பூம்புகார் நாட்டின் வடக்கு எல்லையாக விளங்கியிருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தின் ஆடலரசியான மாதவி பிறந்த ஊர் திருக்கடையூர். அந்த ஆடல் அணங்குக்கு வழங்கப்பட்ட ஊர் மாணிக்கப்பங்கு என்று அழைக்கப்படுகிறது. இங்கு மீனவர்களும், விவசாயிகளும் வசித்து வருகின்றனர். இங்கிருந்து சில அரிய பொருட்கள் அகழ்வைப்பகத்திற்கு சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வரலாற்றுச் சிறப்பும், டேனிஷ் கோட்டையின் பெருமையும், அங்குள்ள அகழ்வைப்பகத்தில் உள்ள அரிய காட்சிப் பொருட்களையும், ஆவணங்களையும் சுற்றுலாப் பயணிகளும், ஆய்வுப் பேராசிரியர்களும், மாணவர்களும் வந்து கண்டுகளிக்கலாம்.

தரங்கம்பாடியைச் சுற்றிலும் பல சிறந்த வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. தரங்கம்பாடி கடற்கரையில் வீசும் ஓசோன் காற்று மனதிற்கு இதம் தரும் தன்மையது. திருக்கடவூரில் தங்கும் விடுதிகளும், உணவகங்களும் பல வந்துவிட்டன. காரைக்கால், பொறையார், மயிலாடுதுறை, சிதம்பரம் போன்ற நகரங்களில் இருந்து அடிக்கடி பேருந்து வசதிகளும் உள்ளன. அனைவரும் வாருங்கள். கண்டுகளித்து பயன்பெறுங்கள்.



தரங்கம்பாடி டேனிஷ் கோட்டையின் தலைவாயில்
கி.பி. 1792 ஏழாம் கிறிஸ்டியன் அமைத்தது



பார்த்தலோமியஸ் சீகன்பால்கு ஜெர்மானியர். லுத்தரன் மதபோதகர்
வாழ்ந்த வீடு. தமிழில் முதல் அச்சுக்கலையை அறிமுகப்படுத்தியவர்



இடிந்து புதையுண்ட செங்கல் சுவர், கோட்டையின் கிழக்கே கடற்கரையில் சுனாமியின்போது வெளிப்பட்டவை - டேனிஷ் காலம்




புதிய எருசலேம் தேவாலயம் சீகன்பால்கு பாதிரியார் கட்டியது - காலம் கி.பி. 1718




தஞ்சை மன்னர் ரகுநாத நாயக்கர்
காலம் கி.பி. 1600-1634




டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில்
வைக்கப்பட்டுள்ள நாயக்கர் கால
இரும்பு ஆயுதங்கள் -
காலம் கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டு




பார்த்தலோமியஸ் சீகன்பால்கு தரங்கம்பாடியில் முதலாவதாக நிறுவிய தமிழ் அச்சுக்கூடக் கட்டடம் - அட்மிரல் வீதி, காலம் கி.பி. 1713



கடற்கரையோரம் கட்டப்பட்டுள்ள கலெக்டர் பங்களா
ஆங்கிலேயர் காலம்



டேனிஷ் ஆளுநர் மாளிகை



டேனிஷ் கோட்டையின் உள்தோற்றம். கீழ்த்தளம் கிடங்கு அறைகள் மற்றும் முதல் தளம் - மேற்குப் பக்கம்




தரங்கம்பாடி அகழாய்வில் கிடைத்த பொருட்கள் - களம்:
சுடுமட் பொருட்கள், பீங்கான் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள்




அகழாய்வு நடைபெற்ற அகழியில் நடைபாதையுடன் உள்ள
அடியில் இருந்த கட்டடப் பகுதி




ஸ்ரீமாசிலாமணிநாதர் கோயில், கடற்கரையில் மண்டபங்கள் இடிந்த நிலையில் மூலவர் கருவறை மட்டும் உள்ளது. குலசேகரபாண்டியன் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு




டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தின் உள்ளே கண்ணாடிப் பேழைகளில் காட்சிக்கு உள்ள அரிய பொருட்கள்




கோட்டை நடுமைதானத்தில் அகழாய்வில் கிடைத்தது
1. கற்குண்டுகள் 2. இரும்பு பீரங்கிக் குண்டுகள் 3. இரும்பாலான பூட்டு
டேனிஷ் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு




கோட்டை மதில் மீது வைக்கப்பட்டிருந்த கற்குண்டுகள் -
நுழைவு வாயில் அருகே பூமிக்கு அடியிலிருந்து கிடைத்தது
டேனிஷ் காலம் கி.பி. 1792




சுதை அலங்காரம் - தூணின் மேல் பகுதி - அகழாய்வில் பூமிக்கு அடியில் கிடைத்தது - டேனிஷ் கோட்டை உள்மைதானத்தில் இருந்தது - காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு




டேனிஷ் கோட்டை கல்வெட்டு - கடற்படைத் தலைவர் ஓவ் கிட்டி கோட்டையைக் கட்டி முடித்து திறந்து வைத்த கல்வெட்டு - காலம் கி.பி. 1620




டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பீங்கான் ஜாடிகள்



டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள கண்ணாடிப் பொருட்கள்



டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சியளிக்கும் பீங்கான் பொருட்கள்



டேனிஷ் கோட்டை அகழ்வைப்பகத்தில் காட்சியில் உள்ள சுடுமண் புகைப்பான்கள்